# சீனவுடனன உறவை சீர்திருத்த விரும்புகிறது அமெரிக்கா

Registered as a Newspaper in Ceylon
வார மலர் ★ விலை சதம் 20





# ஈழநாடு
EELA NADU


மில்க்வைற் நீலசோப்
மேலுறைகளைக்
கவனித்து வாங்குங்கள்
போலி உறைகளால்
ஏமாறுதீர்கள்
மில்க்வைற்
சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

மலர் 11 | சௌமிய வைகாசி 25 | ரபி;அவ் 21 | (7-6-69) | சனிக்கிழமை | இதழ் 116

வாஷிங்டன், ஜூன் 6

அமெரிக்கா சீனவுடனன உறவை சீர்திருத்த விரும்புகிறதென்று அமெரிக்கவெளியுறவு அமைச்சர் திரு. வில்லியம் ரொஜேர்ஸ் தெரிவித்துள்ளார்.

திரு. ரொஜேர்ஸ் பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியொன்றிலேயேமேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விதம் உறவை சரிபடுத்த மாணவர்கள், பத்திரிகையாளர்கள் பரிவர்த்தனை இரு நாடுகளுக்குமிடையில் நடத்துவதற்கு அமெரிக்கா அக்கறைகாட்டியதாகவும் இதற்கு சீனத்தரப்பிலிருந்து எதுவித ஊக்கமான பதிலும் கிடைக்கவில்லையெனவும் திரு. ரொஜேர்ஸ் மேலும் தெரிவித்தார்.

தென் வியட்னமில் தேர்தல் நடைபெறும்போது கம்யூனிஸ்டுகள் தேர்ந்தெடுக்கப்பட்டால் இதனை அமெரிக்கா ஆட்சேபிக்காது ஏற்றுக்கொள்ளும் என்றும் அவர் இது சம்பந்தமாகத் தெரிவிக்கையில் எடுத்துக்கூறினர்.

## பௌத்த பாடசாலை ஆசிரியர்களுக்கு

# நியமனம் வழங்காவிட்டால் பாடசாலைகளை பகிஷ்கரிப்பார்களாம்

### பிரதமரையும் கல்வி அமைச்சரையும் பௌத்த தூதுக்கோஷ்டி சந்திக்கும்

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியில் உள்ள மூன்று பௌத்தபாடசாலைகளிலும் இதுவரைகாலமும்போதித்துவந்த ஆசிரியர்களுக்கு அரசாங்கம்நியமனம் வழங்காவிடில், அப்பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களும், பெற்றோர்களும் நியமனத்தை எதிர்பார்த்திருக்கும் ஆசிரியர்களும், பாடசாலைகளைப் பகிஷ்கரிப்பார்களென பௌத்தபாடசாலை ஆசிரியரொருவர் தெரிவித்தார்.

இந்த ஆசிரியர்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் நியமனம் வழங்கும்படி வற்புறுத்துவதற்கு, தமிழ் பௌத்த காங்கிரஸ் தூதுக்குழு பிரதமரையும், கல்வி மந்திரியையும் இம்மாத மத்தியில் பேட்டி காணவிருக்கிறது இத் தூதுக்குழுவில் கரவெட்டி பௌத்த பாடசாலை ஆசிரியர் திரு. கே. களனியாவைச் சேர்ந்த திரு. எம். ஏ. எஸ். சூரசிங்கா, அச்சுவேலியைச் சேர்ந்த திரு.இ கந்தசாமி, கொற்றுவத்தையைச் சேர்ந்த திரு. கே. நடேசு ஆகியோர்களே இம்மூன்று புதிய ஆசிரியர்களாவர் தற்பொழுது கரவெட்டி பௌத்த பாடசாலையில் மொத்தம் 18 ஆசிரியர்கள்

தமிழர்கள் வேலைவாய்ப்புப் பெறக்கூடிய இச்சந்தர்ப்பத்தை அரசாங்கம் வழங்கத் தயங்கக்கூடாதுஎன்றும் கரவெட்டி பௌத்த பாடசாலை ஆசிரியர் திரு. கே இராசரத்தினம் கூறினர்.

சம்பளம் பெருது போதிக்கும் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கி அவர்களை இடமாற்றம்செய்துவிட்டு அந்த



# 'குறளில் இல்லாதது ஒன்றுமில்லை'

### திரு கா. பொ. இரத்தினம்

அல்லைப்பிட்டி, வெள்ளி

குறள்காட்டும் வழியினைப் பின்பற்றிஞல் நமது வாழ்க்கையை நல்நிலையில் வகுத்து முன்னேற்றப் பாதையில் செலுத்திக்கொள்ளலாம். இக்காலத்தில் கவிஞர்கள் எழுதும் கவிதைகள் சொற்ப காலத்தில் மறைந்துவிடுகின்றன. ஆஞல் திருக்குறள் எக்காலத்திலும் அழியாது. அது எக்காலத்திற்கும் உரியது திருக்குறளிலே உலகத்திலுள்ள சகலமுமே அடங்கியுள்ளது. அவற்றில் சில அடங்கவில்லையே யெனக்கூறுபவர்கள் திருக்குறளை முற்ருகப் படிக்காதவர்கள் என்றே நான் துணிந்து கூறுவேன். சந்திரனை மனிதன் அடைய முடியுமென்று திருக்குறளில் எழுதியிருக்காவெனச்சிலர் கேட்கலாம். ஆம்சகலமுமே அடங்கியிருக்கென என்ஞல் நிரூபிக்கமுடியும்.

மேற்கண்டவாறு கிளிநொச்சி றெட் றிக் கோ மைதானத்தில் தொல்காப்பியர் அரங்கில் நடைபெற்ற பதிஞருவது திருக்குறள் மகாநாட்டின்போது தலைமைப் பேருரை நிகழ்த்திய கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது.

நாம்மட்டுமல்ல வெளிநாட்டிலுள்ள சகல இன மதக்காரர்களும் விரும்பித் தங்களுடைய மொழிகளில் குறளை மொழிபெயர்த்துப் படித்துவருகிருர்கள். அதன் தெய்வீகக் கருத்துக்களை அவர்கள் உணர்கிருர்கள்.

ஒரு தமிழ்ப்புலவர் இயற்றிய திருக்குறளை உலக மக்கள் போற்றிவருகிருர்கள் என்ருல் அது நாம் செய்த புண்ணியமேயாகும். வள்ளுவன் ஒரு தெய்வீகப் புலவன் அவன் போன்றவர்களால் தான் நமது தமிழினம் ஒருவாறு தலை நிமிர்ந்து நிற்கிறது எமது அரசியல் வாதிகள் கூட திருக்குறள் காட்டும் வழிவகைகளைப் பின்பற்றிஞல் சில வேளை பொதுமக்களுக்காக வே தங்களை அர்ப்பணிக்கக் கூடும்,

இலங்கை பூராவிலுமிருந்து திருக்குறள் போட்டியில் பரிசுபெறும் பெருந்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பௌத்த காங்கிரஸ் தூதுக் குழு பிரதமரையும், கல்வி மந்திரியையும் இம்மாதமத்தியில் பேட்டி காணவிருக்கிறது இத் தூதுக்குழுவில் கரவெட்டி பௌத்த பாடசாலை ஆசிரியர் திரு. கே. இராசரத்தினமும் இடம் பெறுவார்.

கரவெட்டி ஸ்ரீ நாரத தமிழ் சிங்கள பௌத்த பாடசாலைக்கு, 3 புதிய ஆசிரியர்களை கல்வி அமைச்சு நியமித்தது. இவர்களில் இருவர் தமிழர்; ஒருவர் சிங்களவர். மேலும் இரு சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.

சேர்ந்த திரு. கே. நடேசு ஆகியோர்களே இம்மூன்று புதிய ஆசிரியர்களாவர் தற்பொழுது கரவெட்டி பௌத்த பாடசாலையில் மொத்தம் 18 ஆசிரியர்கள் கடமையாற்றுகிறார்கள். இவர்களில் 15 பேர்கள் சம்பளம்பெருமல் இலவசமாகப் பணியாற்றி வருகின்றனர்.

கடந்த நான்கு வருடங்களாக இப்பாடசாலையில் சம்பளம் பெருது பணியாற்றி வரும் ஆசிரியர்களையும் அரசாங்கம் கட்டாயமாகப் பொறுப்பேற்கவேண்டும் என்றும், சிறுபான்மைத்

கரவெட்டி பௌத்த பாடசாலை ஆசிரியர் திரு. கே இராசரத்தினம் கூறினர்.

சம்பளம் பெருது போதிக்கும் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கி அவர்களை இடமாற்றம்செய்துவிட்டு அந்த இடங்களுக்கு சிங்கள ஆசிரியர்களை இங்கு அனுப்பும்படிகோரப்போவதாக தமிழ் பௌத்த சங்கத் தலைவர் திரு. எம். வைரமுத்து கூறினர்.

இப்பாடசாலைகள் அரசாங்கத்திஞல் இம்மாதம் 1-ம் திகதி கையேற்கப்பட்டது தெரிந்ததே.

(உடுப்பிட்டி நிருபர்)



ஈழநல்லூர் சகோதரிகள் மோகனு, நந்தனு, சாந்தனு ஆகியோரின் பரத நாட்டிய நிகழ்ச்சி இன்று மாலை 6-30 மணிக்கு யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது நல்லூர் கைலாசநாதர் கோவில் நிதிக்காக நிகழும் இந்நிகழ்ச்சி சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணியபிள்ளை தலைமையில் நடைபெறும். இவர்கள் திருமதி நீலா சத்தியலிங்கத்தின் மாணவிகள்.

இயல் வாதிகள் கூட திருக்குறள் காட்டும் வழிவகைகளைப் பின்பற்றிஞல் சில வேளை பொதுமக்களுக்காக வேதங்களை அர்ப்பணிக்கக் கூடும்',

இலங்கை பூராவிலுமிருந்து திருக்குறள் போட்டியில் பரிசுபெறும் பெருந்தொகையான மாணவர்களை நான்காணும்போது அவர்களுக்கு குறளிலிருக்கும் ஆற்றலைக் காணமுடிகிறது. இதனை என் வாழ் நாளிலே அடைய முயடியாதபெரும் பாக்கியமாகவே கருதுகிறேன் என்றுற அளியாத குறளை நாம் மகிழ்வோடு கற்று வள்ளுவன் காட்டிய வாழ்க்கைப் பாதையின்படி நடக்க முற்படவேண்டும்.

## சங்காபிஷேகம்

மட்டுவில், சனி

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கண்ணகாம்பிகாதேவிக்கு சகஸ்ர சங்காபிஷேகம் இன்று காலை நடைபெறும். இரவு பூந்தண்டிகையில் அம்பிகை திருவீதி வலம் வருவார்.

# தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று மாலை இழுக்கப்பட்ட தேசியலொத்தர்சபையின் 249-வது சீட்டிழுப்பில் பரிசுபெறும் டிக்கட் விபரம் வருமாறு:

முதலாவது பரிசு
25 K 0258 ரூபா 88,730

இரண்டாவது பரிசு
40 O 0238 ரூபா 35,492

மூன்ருவது பரிசு
37 Y 0626 ரூபா 8,873

தலா ரூபா 443-65 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 17 A 0728 | 14 A 0392 |
| 25 A 0593 | 19 A 0140 |
| 11 A 0656 | 23 A 0424 |
| 24 B 0484 | 40 B 0334 |
| 36 B 0432 | 16 B 0821 |
| 18 C 0281 | 06 C 0442 |
| 14 C 0674 | 13 C 0068 |
| 02 C 0717 | 02 C 0451 |
| 23 D 0271 | 35 D 0508 |
| 09 D 0554 | 31 D 0156 |
| 21 E 0046 | 06 E 0354 |
| 31 E 0227 | 35 E 0961 |
| 40 E 0444 | 21 E 0602 |
| 24 E 0205 | 06 F 0481 |
| 41 F 0439 | 39 F 0491 |
| 03 F 0297 | 16 G 0318 |
| 22 G 0964 | 01 H 0603 |
| 10 H 0516 | 04 H 0684 |
| 14 H 0156 | 06 H 0833 |
| 20 H 0975 | 35 H 0530 |
| 23 H 0047 | 11 J 0629 |

| | |
|---|---|
| 11 J 0038 | 07 J 0216 |
| 03 J 0136 | 03 K 0082 |
| 06 K 0633 | 10 L 0922 |
| 26 L 0716 | 32 L 0577 |
| 03 M 0718 | 08 M 0296 |
| 08 M 0159 | 19 M 0037 |
| 37 N 0426 | 01 N 0470 |
| 11 N 0986 | 20 N 0554 |
| 06 O 0785 | |
| 28 O 0600 | 16 O 0834 |
| 10 P 0948 | 02 P 0388 |
| 24 P 0985 | |
| 35 P 0213 | 18 P 0855 |
| 13 P 0073 | 10 P 0897 |
| 20 P 0275 | 11 P 0834 |
| 13 P 0386 | 11 Q 0419 |
| 22 R 0466 | 10 R 0846 |
| 31 S 0710 | 38 S 0336 |
| 11 T 0380 | 18 T 0463 |
| 24 T 0115 | 02 T 0722 |
| 13 T 0193 | |

| | |
|---|---|
| 24 T 0819 | 10 U 0018 |
| 17 V 0435 | 29 V 0242 |
| 38 V 0548 | 17 W 0718 |
| 24 W 0166 | 21 W 0835 |
| 35 W 0556 | 19 X 0381 |
| 12 X 0672 | 13 X 0146 |

| | |
|---|---|
| 15 X 0546 | 37 Y 0183 |
| 03 Y 0556 | 27 Y 0351 |
| 24 Y 0991 | 27 Z 03[illegible]2 |
| 22 Z 0159 | |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை.)

'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவு விழா

# தங்கப் பதக்கங்கள்! வெள்ளிக் கிண்ணங்கள்!! பணமுடிப்புகள்!!!

## வரையாது வழங்கும் வள்ளல்கள் இவர்களே

### பல்வேறு போட்டிகளுக்கும் பரிசில்கள் குவிகின்றன!

— நமது காரியாலய நிருபர் ''திரு'' —

யாழ்ப்பாணம், சனி

'ஈழநாடு' பத்தாவது வருடத்தைப் பூர்த்தி செய்யும் போது நடைபெறப்போவது 'ஈழநாடு' கலைவிழாவா? விளையாட்டு விழாவா? வாண விளையாட்டா? அலங்கார வண்டிகளின் பவனியா? எதுவானுலென்ன. நல்லது செய்வதற்கு நமதுதவி என்றுமுண்டு என்று பரிசுப் பொருட்களை வரையாது வழங்கியுள்ளார்கள் வள்ளல்களான வர்த்தக அன்பர்கள் பலரும்!

தங்கப் பதக்கங்கள்! வெள்ளிக் கிண்ணங்கள்! பணமுடிப்புக்கள்! வானெலிப் பெட்டிகள்! அலங்காரப் பொருட்கள்! இன்னும் எத்தனை எத்தனையோ விதமான பரிசுப் பொருட்கள் 'ஈழநாடு' விழாவுக்கென இத்தனையும் இன்முகத்துடன் தந்துதவிய பெருந்தகையாளர்கள் வியாபார வேந்தர்கள்தான்!

பரிசில்வேண்டி உதவி நாடும் போதெல்லாம் இல்லையென்ளுது வழங்கும் பீடி உற்பத்தியாளர்கள்; அன்பு, நேர்மை, நிதானம் ஆகியவற்றின் சின்னமாக விளங்கும் சோப் உற்பத்தியாளர்கள்; தங்கமான மனசு கொண்ட தங்க நகைகளின் விற்பனையாளர்கள்; தமிழ், ஆங்கில, சிங்கள நூல்களின் பிரசுரகர்த்தர்கள்; குளிர்ந்திடும் ஐஸ்பழங்களைத் தயாரித்திடும் கனிவான இதயம் கொண்ட கபே உரிமையாளர்கள்; இனிமையாகப் பொழுதைப் போக்க உதவும் சினிமாத் தியேட்டர் அதிபர்கள்; கட்டடக்கலை நிபுணர்கள்; பலரகப் பொருட்களின் ஏக விநியோகஸ்தர்கள் இப்படிப் பரிசுப் பொருட்கள் தந்துள்ளவர்கள் பலரகம்.

'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவுவிழா இம்மாதம் 12ம், 13ம்,14ம் திகதிகளில் நடைபெறவிருப்பது தெரிந்ததே. முதல் இரு நாட்களும் விளையாட்டு நிகழ்ச்சிகளும், கடைசி நாள் காலையில் மரதன் ஓட்டமும், அலங்கார வண்டிகளின் பவனியும் இரவு நிகழ்ச்சியாக கலைவிழாவும் பரிசளிப்பு வைபவமும், வாண விளையாட்டுக்களும் நடைபெறும்.

பல்வேறு போட்டிகளுக்கும் பரிசிலாக வழங்க மிக முக்கியமானவையாக இதுவரை 5தங்கப்பதக்கங்களும், 10 வெள்ளிக் கிண்ணங்களும் கிடைத்துள்ளன. இவைகளை தருகின்றேரும் பரிசில் பொருள்' என்று கூறித் தந்துதவிய வர்த்தக வள்ளல்கள் இவர்கள்தான்!

யாழ்ப்பாணம் ஆர். வி ஜி. பீடித் தொழிற்சாலை உரிமையாளர் திரு. வ. வ இராமசாமிப்பிள்ளை -ஒரு தங்கப் பதக்கம்.

யாழ்ப்பாணம் கன்ஞதிட்டி ஏ. கே. எஸ். நகை வியாபாரிகள் — ஒரு தங்கப் பதக்கம்.

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம் —ஒரு தங்கப் பதக்கம்.

யாழ்ப்பாணம் மில்க்வைற் சோப் ஸ்தாபனம்— ஒரு தங்கப் பதக்கம்.

யாழ்ப்பாணம் சுபாஸ்கபே உரிமையாளர்—ஒரு தங்கப் பதக்கம்.

யாழ்ப்பாணம் நொர்தன் இன்டஸ்றீஸ் ஸ்தாபனம்— ஒரு வெள்ளிக்கிண்ணம்.

யாழ்ப்பாணம் கன்ஞதிட்டி கே என். மீருன் சாகிப் நகை வியாபாரிகள் ஒரு வெள்ளிக் கிண்ணம்.

யாழ்ப்பாணம் கே டி எம். ஜுவல்லர்ஸ் நகைவியாபாரிகள் ஒரு வெள்ளிக்கிண்ணம்.

யாழ்ப்பாணம் ராஜா தியேட்டர் உரிமையாளர் திரு எஸ் தியாகராஜா— ஒரு வெள்ளிக் கிண்ணம்.

யாழ்ப்பாணம் ஸ்டான்லிவீதி 'எம்மோ' சன்ஸ் ஸ்தாபனத்தார்— ஒரு வெள்ளிக்கிண்ணம்

கொழும்பு மகாராஜா ஆர்கனை சேர்ஸ்— இரண்டு வெள்ளிக்கிண்ணங்கள்.

கட்டடக்கலை நிபுணரான கொழும்பு வி. ஸி. துரைராசா —ஒரு வெள்ளிக்கிண்ணம்

கொழும்பு யாழ்ப்பாணம் சூரியா ஜுவல்லர்ஸ் நகைவியாபாரிகள் — ஒரு வெள்ளிக்கிண்ணம்

மெய்கண்டான் அதிபர் திரு. என் இரத்தினசபாபதி — பணமுடிச்சு.

கொழும்பு லீலா ஸ்டோர்ஸ் அச்சக உரிமையாளர் திரு. ரீ. சின்னத்துரை பணமுடிச்சு.

யாழ்ப்பாணம் என். சாம்பசிவம் அன் கோ— விலையுயர்ந்த பரிசுப் பொருட்கள்

மேலும் பரிசில் பொருட்கள் வழங்கியோர் பட்டியல் தொடர்ந்து 'ஈழநாட்'டில் வெளிவரும்.

# வழிபடவரும் அடியார்களை தடுப்பது சிவ நிந்தனை

## கோப்பாய் எம். பி. கூறுகிருர்

யாழ்ப்பாணம், சனி

''ஒடுக்கப்பட்டசிலசைவர்கள் இன்று பௌத்தராக மாற நினைப்பது சாதிக் கொடுமையின் எதிரொலியாகும். சாதியைச் சொல்லி ஒரு சில சைவர்களை ஆலயங்களில் பிரவேசித்து வழிபடாமல் தடுப்பது பழக்கமாக இருந்து இன்று குண்டர்கள் தலைமையில் இயக்கமாக மாறியுள்ளது. மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் இதற்கு எடுத்துக்காட்டாகும். வழிபடவரும் அடியார்களைச் சாதி சொல்லித் தடுப்பது சிவ நிந்தனையாகும். இதற்கு நரகம் தண்டனையாகும்.''

இவ்வாறு கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

திரு. கதிரவேற்பிள்ளை தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சைவத்துக்குச் செய்கின்ற இந்த அநீதியை பிழையான சட்டங்களை எடுத்துச் சொல்லி, தொடர்ந்து நடத்த மாவிட்டபுரத்தில் முயற்சி செய்யப்பட்டது. கந்தன் கருணையால் அந்த முயற்சிகள் தோல்வியடைந்து சைவம் வெல்லவும் சட்டம் தெளிவாக்கப்படவும் திரு. சுந்தரலிங்கத்தின் வழக்கில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு உதவியாகியது. இனிமேலும் இந்த அநீதியை சாதியின் பெயரால் செய்து சைவத்தை அழிக்கவும் சைவ மக்களை பௌத்தர்களாக மாறும்படி கலைக்கவும் நடக்கும் முயற்சி உடனடியாக ஒழியவேண்டும்.

அறியாமையினுல் ஒரு சில சைவர்களை ஆலயங்களுக்கு வெளியில் வைத்தவர்கள் இன்று ஆணவத்திஞல் எல்லா சைவ மக்களையும் ஆலயத்துக்கு வெளியில் வைக்கத் திட்டமிடுகின்றனர். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற முதுமொழிக்குப் புறம்பாக எல்லோரையும் நடத்த இவர்கள் முற்படுகின்றனர். மாவிட்டபுரத்தில் இந்தத் திட்டம் ஆலோசிக்கப்பட்டதாக அறிகிறேன். சமூக குறைபாடு சட்டத்துக்குப் பயந்து தர்மகர்த்தாக்கள் சட்டத்தையேமீறுகின்றனர் இதற்கு சைவப் பெருமக்கள் மாவிட்டபுரக் கோயிலுக்குள் சென்று வழிபட முடியாமல் பலியாகின்றனர். ஆகவே சைவப் பொது மக்கள் உடன் நடவடிக்கை இதுபற்றி எடுக்கவேண்டும். நீதிமன்றத்தில் வழக்கு வைத்து கோயிலை வழமை போல் திறந்து வைக்கவும், வழிபாட்டைப் பாதிக்கும் சகல தடைகளை நீக்கவும் உத்தரவு பெறவேண்டும். தர்மகர்த்தவுக்கு உரிய சட்டத்தையும் கடமையையும் மீறுகின்ற தர்மகர்த்தாவையும் அவர் போன்றவர்களையும் ஆலய நிர்வாகத்திலிருந்து விலக்கி சைவப்பண்புள்ள சட்டத்தை மீருது வழிபாட்டுக்குத் தடை செய்யாத சைவப் பொதுமக்களிலிருந்து புதிய தர்மகர்த்தாக்களை நீதிமன்றங்கள் மூலம் நியமிக்கவேண்டும். இந்த நடவடிக்கை மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலுக்கும் மற்றக் கோயில்களுக்கும் எடுக்கப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்ப நாடனின் சமய சமரச உணர்வு

துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்வதில் இந்த இளைஞனுக்குத்தான் என்ன பேராசை; என்ன வீரத் துடிப்பு! அந்தப் பேராசையையும் ஆத்திரத்தையும் எவ்வளவு பொருத்தமாக வெளியிடுகிறது ராமன் கேள்வி. முனிவன் என்ன பதில் சொன்னான் தெரியுமா? ஒன்றுமே பதில் சொல்லவில்லையாம். மௌனியாக இருந்து விட்டானாம் ஏன்? மௌனவிரதத்தில் இருந்தான், யாக தீட்சையில் இருந்ததால் அந்தநிலைராமனுக்குவிளங்கி விட்டது. உடனே முனிவனைத் தொழுது விலகி வந்து விட்டான், ''மௌனம் குலையலாகாது; விரதபங்கம் வரலாகாது'' என்று. பிறகு என்ன செய்தான், என்ன நடந்தது என்பவற்றையெல்லாம் கீழ்வரும் கவிதைக் கண்ணாடி அப்படியே படம் பிடித்துக்காட்டுகிறது.

### கம்பர் கவி விருந்து

வார்த்தைமா(று)
உரைத்திலன் முனிவன்
மௌனியாய்ப்
போர்த்தொழில் குமரனும்
தொழுது போந்தபின்
பார்த்தனன் விசும்பினைப்
பருவமேகம் போல்
ஆர்த்தனர் இடித்தனர்
அசனி அஞ்சவே!

இந்த பாட்டிலேராமனைப் ''போர்த் தொழில் குமரன்' என்று குறிப்பிடுவது, ராமனுக்கு துஷ்ட அரக்கர்களோடு போர் புரியவேண்டும் என்பதிலுள்ளஆத்திரத்தையே குறிப்பாகக் காட்டுகிறது. முனிவனை விட்டு விலகிவந்ததும் ராமன் ஆகாயத்தைப் பார்க்கின்றான், தற்செயலாக. ஆஹா, மழை மேகங்களா? என்ன இடி! ஓஹோ, அவர்கள்தான் வந்துவிட்டார்களோ? ஆம், முனிவன் சொன்ன அந்தத் தீயவர். மழைக்கால் இருட்டல்ல; ராட்சஸ இருள்தான்! ராட்சஸ இடிதான்! அந்தத்தீயவர்களையும், தீத் தொழில் புரிவோரையும்

அவன் என்ன செய்தான்? என்ன சொன்னான்?

கண்ட அக்குமரனும்
கடைக் கண் தீஉக
விண்தனை நோக்கித் தன்
வில்லை நோக்கினன்
''அண்டர் நாயக!
இனிக் காண்டி, ஈண்(டு)
அவர்
துண்டம் வீழ்வன!'' எனத்
தொழுது சொல்லினன்.

விண்ணையும் நோக்கினன். வில்லையும் நோக்கினன், பிறகு அண்ணனை நோக்கினன், அவ்வளவுதான் ''இனி ஓட்டை உடைசல் இல்லாமல் அந்த முழு மக்களைப் பார்க்க முடியாது!' என்று சொல்லிவிட்டான் என்ன தர்மாவேசம். ''அண்ணா, இப்போதே துண்டம் துண்டமாகக்காண்பாய் அந்த ஆசாமிகளை இந்த நிலத்திலே'' என்று லட்சுமணன் அரக்கர்கள் இருந்த விண்ணை நோக்கி வில்லை நோக்கித் தன்னை நோக்கிச் சொன்னதும், ராமன் உடனே விசுவாமித்திரனுடைய அந்த வேள்விச் சாலையைப் 'பந்தோபஸ்து' செய்ய விரும்பினான். மாமிசத்துண்டுகளும் இரத்தமும் ஹோம அக்கினியிலே விழுந்து விழாதபடி, அவர்கள் செத்தும் கெடுத்தார்கள் யாகத்தை என்று ஏற்படாதபடி. அதற்காக என்ன செய்தான்? வேள்விச் சாலையைச் சுற்றிப் பந்தல் போட்டதுபோல் ஒரு கூடம் அமைக்கத் தொடங்கினான். நல்லது, அதற்கானபொருள்கள்? கையிலோ வில்லும் அம்பும்தான். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பார்கள். ராமனோ தன் ஆயுதங்களாகிய அம்புகளைக் கொண்டே எங்கும் ஒரே புல்லுப்பந்தல் வேய்ந்துவிட்டானும்.

தூமவேல் அரக்கர் தம்
நிணமும் சோரியும்
ஓமவெங் கனலிடை
உகும்(என்று) உன்னி, அத்
தாமரைக் கண்ணனும்
சரங்களே கொடு
கோமுனி இருக்கை
ஓர் கூடம் ஆக்கினான்.

அம்புகளை இடைவிடாமல் தொடுத்துத் தொடுத்து, மேலே மேலே பின்னல் பின்னலாகத் தொடுத்து, அந்த அம்புக்கூட்டங்களின் நெருக்கத்தினாலேயே அந்த வேள்விச் சாலையை மறைத்துப் பாதுகாக்கும் ஒரு கூடம்

கொடிய விஷம் போன்ற வஞ்சனை நிறைந்த அரக்கர்களைக் கண்டதும் நடுங்கிப் போன முனிவர்களும் இராமனைச் சரணடைந்தார்களாம். கம்பனுடைய சைவ வைஷ்ணவ சமரஸ உணர்ச்சிக்கு இந்த உபமானமும் ஒரு சாட்சி. அந்த முனிவர்களுக்கு இராமன் அபயம் அளித்துக் கொண்டே வில் நாணையும் இழுத்துச்செவிப்புறம் நிறுத்துவதும், அம்புகளைச் சோனாவாரியாகப் பொழிந்து ராக்ஷஸவதம் செய்வதும் என்னவேகமாக

இராமாயண இரசிகமணி

## ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்

(நல்லை ஆதீன கர்த்தர்)

போலச்செய்து விட்டானும் இராமன். இதைச் சரகூடம் என்று சொல்வதுண்டு. முனிவர்களோ அரக்கர்களைக் கண்டதும் நடுங்கி இராமனை அபயம் வேண்டுகிறார்கள்.

நஞ்(சு) அட எழுதலும்
நடுங்கி நாள்மதிச்
செஞ்சடைக் கடவுளை
அடையும் தேவர்போல்
வஞ்சனை அரக்கரை
வெருவி மாதவர்
அஞ்சன வண்ண!
நின் அபயம் யாம் என்றார்

அமிர்தத்திற்கு ஆசைப்பட்டுப் பாற்கடல் கடையும் போது, கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல், கொடிய விஷம் தோன்றியதும், தேவர்கள் எல்லாம் நடுங்கிச் சிவபெருமானைச் சரணமடைந்தார்களல்லவா? அப்படியே சரிய

நடைபெறுகின்றன!

கவித்தனன் கரதலம்
''கலங்கல் நீர்!'' எனச்
செவித்தலம் நிறுத்தினன்
சிலையின் தெற்றநாண்
புவித்தலம் குருதியின்
புணரி ஆக்கினன்
குவித்தனன் அரக்கர்தம்
சிரத்தின் குன்றமே

செவித்தலம் நிறுத்திய கோதண்டத்தின் ''தெய்வ நாண்'' எத்தனை பாணங்களை உதைத்துத் தள்ளியிருக்க வேண்டும். அந்த ராம பாணங்கள் எத்தனை ராட்சஸர்களை வதைத்துத்தள்ளியிருக்கவேண்டும் என்றெல்லாம் சொல்லாமலே ''அந்த நிலப்பகுதி கடலும் குன்றும் ஆகிவிட்டது'' என்று சொல்வதிலேதான் என்ன சொற்செட்டு.

(தொடரும்)

# வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி

திருக்குறள்- வள்ளுவன் நமக்கு ஈந்த ஒரு வாழ்க்கைப் பொதுநூல்; அது ஓர் இனத்தையோ, மதத்தையோ சாராமல் வாழ விரும்புகிற மக்கள் இனத்துக்குச் சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ள பெருநூல். திருக்குறள் கற்றுணர்ந்தால் பூமியிலே பிறந்துவிட்டோமே, எப்படி வாழ்வது, எந்த வழியைக் கைக்கொள்வது என்று திண்டாட வேண்டியதில்லை. உலகிலே நல்லவனாக வாழ-மனிதனாக வாழ விரும்பின் குறளைக் கையிலெடுத்துக் கொள்ளுங்கள். திருக்குறளைப் பெற்ற தமிழன் வாழத் தெரியாமல் துன்பப்படலாமா? வள்ளுவன் காட்டிய வழி நின்று ஒழுகி-அவன் கூற்றுப்படி வாழ்வாங்கு வாழ்வோமாயின் வானுறையும் தெய்வத்துள் வைத்து எண்ணப்படுவோம். இவ்வுலகையே தேவலோகமாக்கிவிடலாம் குறள் வழி நின்று.

வட மொழி நூல்கள் பலவும் கூறும் பிரம்மச்சரியம், கிருகஸ்தம், வானப்ரஸ்தம், சந்நியாசம் என்ற நான்கினையும் வள்ளுவர் இல்லறம், துறவறம் என்ற இரண்டினுள் அடக்குகிறார். நாம் உலகில் பிறந்தது, திரும்பத் திரும்ப இந்த உலகிலே பிறந்து பிறந்து சிற்றின்பத்தை நுகர்வதற்கு அல்ல. இறைவனது பேரின்பத்தை எய்தவேண்டும். வீடுபேறடைவதற்கு மனிதப் பிறவி வேண்டும். துறவறம் பூண்டால்தான் வீடுபேறடையலாம் என்பது சிலருடைய தவறான கருத்தாகும். இல்லறத்திலிருந்து கொண்டே பேரின்பத்தை அடையலாம். தொல்காப்பியரும், காஞ்சித்திணையிலே,

''காமஞ் சான்ற கடைக்
கோட்காலை
ஏமஞ் சான்ற மக்களொடு
துவன்றி
அறம்புரி சுற்றமொடு
கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல்
இறந்ததன்பயனே''

எனக் கூறுகிறார்.

வள்ளுவர் ''அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை'' என்று கூறுமுகத்தான் இல்வாழ்க்கை சிறந்தது எனக் கூறுகிறார். அன்பையும் அறத்தையும் கொண்டு இல்வாழ்க்கை வாழ்வோமாயின் அன்பினால் பண்பும், அறத்தினாற் பயனும் பெற்றோமாவோம். அன்பை அடிப்படையாகக் கொண்டு வாழும் வாழ்க்கை மிகச் சிறந்து விளங்கும். இல்வாழ்க்கையில் காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம். அதிலும் தலைவியினுடைய பொறுப்பு மிக இன்றியமையாதது. இதை நன்குணர்ந்த வள்ளுவர், 'வாழ்க்கைத்துணை நலம்' என்றொரு அதிகாரத்தையே வைத்துள்ளார். ஒரு தலைவன் சிறந்த துணைவியைப் பெற்றுவிட்டானானால் அவன் எல்லா இன்பமும் பெற்றவனாவான்.

மனை அறத்திலே மனைத்தக்க மாண்பு, மகளிரிடத்திலேதான் எதிர்பார்க்கப்படுகிறது. மாண்பு என்பதற்குப் பரிமேலழகர் நற்குண நற்செய்கைகள் எனக் கூறி அந்த நற்குண நற்செய்கைகளாவன: துறவிகளை ஆதரித்தல், விருந்தினரை உபசரித்தல், வறியவர்களிடத்து அருளுடைமை, வருவாய்க்குத்தக்க செலவு செய்தல், ஒப்புரவு செய்தல் முதலாயின எனக் குறிப்பிடுகின்றார். இத்தகைய வாழ்க்கைத் துணைவியை அடைந்த தலைவன் ஏறுபோற் பீடு நடை பயில்வான்.

கொழுநன் குறிப்பறிந்து நடப்பவளே சிறந்த மனையாள் ஆவள். அது தெரியாமல் அழகு, பண்பு முதலிய பிற திறமைகள் இருந்தும் பயனில்லாததாகிவிடும். கணவனுக்கு இசை தெரிந்தால் மனைவிக்கும் இசை தெரிந்திருக்க வேண்டும், இல்லையேல் வாழ்க்கை சோபிக்காது. கண்ணகிக்கு இசை, கூத்து இரண்டும் தெரியாததால்தான் கோவலன் - கண்ணகி வாழ்க்கை

பிளவுபட்டது. இசையும், கூத்தும் நன்குதெரிந்த மாதவியை நாடினான் கோவலன். எனவே கணவனின் திறமைகளில் மனைவி பங்குகொள்ள வேண்டும். அவனது தொழில்பற்றிய விளக்கங்களை அறிந்திருக்கவேண்டும். அவன் அவற்றைக் கூறும் போது ஆவலோடு கேட்க வேண்டும். கணவனுடைய நலத்தில் அக்கறை காட்ட வேண்டும். இவ்வாறு நடக்கும் இல்வாழ்க்கை இன்பமாகவும், பிறரால் போற்றவும் பெறும். இவ்வில்லறத்துள்ளும் கணவனும் மனைவியும் அறிவும் உணர்வும் கலந்து பண்பட்டவர்களாய், தாம்மாத்திரம் இன்புற்றால் போதும் என்றிராமல் பிறரையும் இன்புறச் செய்ய

கண்ட வள்ளுவர், ''தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்'', ''தம்மக்கள் மழலைச் சொல் கேளாதவர்'' என உறவு காட்டிக் கூறுகின்றார்.

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற வைப்புமுறையிலே பொருள் அறத்துக்கும், இன்பத்துக்கும் இன்றியமையாமை நோக்கி வள்ளுவர் பொருட்பாலை நடுவில் வைத்தார். அறம் செய்வதற்குப் பொருள் வேண்டும் இன்பமாக வாழ்வதற்கும்பொருள் வேண்டும். அப்பொருளை எய்தி அனுபவிக்கும்போது,

''காக்கை கரவா கரைந்
துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள''

என்கிறார் வள்ளுவர்.

— தமிழ்ப்பிரியை —

வேண்டும் முகமலர்ந்து விருந்தினரை வரவேற்று செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும் வாழ்க்கையை உடையவர்களாய் அன்போடிணைந்து வாழ்வு நடாத்தும் நிலையே சிறப்புடைய மனை அறம் ஆகும். விருந்தினரை உபசரித்தல் ஒரு குடும்பத் தலைவன்-தலைவியரது இன்றியமையாத கடனாகும்.

'வாழ்க்கைத் துணை நலம்' என்ற அதிகாரத்தை அடுத்து வைக்கப்பட்ட அதிகாரம் 'நன்மக்கட்பேறு'. வள்ளுவர் நல்ல புதல்வர்களைப் பெறுதல் என அடைமொழி கொடுத்துக் கூறுகின்றார். நல்ல புதல்வர்களைப் பெற்றவர்கள் 'புத்' என்ற நரகத்திலிருந்து விடுபட்டவர்களாவர். அதனால்தான் புத்திரர்கள் என்ற பெயர்க்காரணம் உண்டாயிற்று 'புத்' என்ற நரகம் கிட்டாது என்பது மட்டுமல்ல ஏழு பிறப்பிலும் தீயவை தீண்டாதென வள்ளுவர் கூறுகிறார்.

''மக்கள் மெய்தீண்டல்
உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டலின்பஞ்
செவிக்கு''

இம்மக்கள் மெய்தீண்டலினால் உடலின்பத்தையும், தமமழலைச் சொல்லைப் பிறர் கேட்பதனால் செவிக்கின்பத்தையும் கொடுக்கின்றனர்.

காக்கைகள் தமக்கு இரை கிடைத்தபோது தம் இனத்தையும் கூவி அழைத்து உண்பதுபோல நாம் நுகர்வனவற்றையும் பிறரையும் நுகரச் செய்ய வேண்டும். நல்ல பசுவின்பால் அழுக்குப் படிந்த கலத்திலே ஏந்தப்பட்டமையால் பாலைச் சுவைக்க முடியாததுபோல பண்பில்லாதவன் கையிலகப்பட்டால் அச்செல்வமும் பிரயோசனமில்லாது போய் விடும். வள்ளுவர் பண்புடைமை எனக் குறிப்பிடுவது அன்புடைமை. ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டுமாகும்.

வள்ளுவர்காட்டும் கொழுநற் தொழுதெழும் கோதையின் இயல்பும், அறமும் கூறுந்தரமின்று. தனது தலைவனுக்காகவே வாழ்ந்து அவனின்பம் தன்னின்பமாகக் கொண்டு அவனுக்காகவே யாவற்றையும் தியாகம் செய்யும் பண்பும் கற்புநெறி கடவாக் கடப்பாடும் வள்ளுவர் காட்டும் மனை அறத்திலே பரவிக் கிடப்பதை நாம் காணலாம். அவளது இயல்பை ஒரு குறளில் காட்டுகிறார்.

தலைவி கண்ணுக்கு மை தீட்டும்போது கண்களிலே தான் கோலை வைத்திருந்த போதும் அந்தக் கோலை கண்காண முடிவதில்லை. அது

## வாழ்க்கையில் நிம்மதி

துன்பம் மரணம். மரணத்திற்கு மிஞ்சியது வேறு என்ன இருக்கிறது?

ஆனால் உண்மையில் மரணம் ஒரு துன்பமா? சில வேளைகளில் துன்பங்களிலிருந்து விடுதலை தரும் இன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒஹோ, அவர்கள் தான் வந்துவிட்டார்களோ? ஆம், முனிவன் சொன்ன அந்தத் தீயவர். மழைக்கால் இருட்டல்ல; ராட்சஸ இருள் தான்! ராட்சஸ இடிதான்! அந்தத்தீயவர்களையும், தீத்தொழில் புரிவோரையும் கம்பன் காட்டும் ஜாலக் கண்ணாடிவழியாக எவ்வளவு பிரத்யக்ஷமாகப் பார்த்து விடுகின்றோம்.

எய்தனர் எறிந்தனர்
எரியும் நீருமாய்ப்
பெய்தனர் பெடுவரை
பிடுங்கி வீசினர்
வைதனர் தெழித்தனர்
மழுக்கொண்(டு) ஒச்சினர்
செய்தனர் ஒன்றல
தீய மாயமே!

அரக்கர்கள் அம்புகளை எய்தார்களாம்; வேல் முதலிய ஆயுதங்களை வீசினார்களாம்; மலைகளையும் பிடுங்கி வீசினார்களாம்; நெருப்பும் நீருமாய்ச் சொரிந்தார்களாம். கோபம் அடங்காமல் வைதார்களாம், அதட்டினார்களாம். ஒன்றல்ல; பலவான தீயமாயச்செயல்களைச் செய்தார்களாம். கொஞ்சநேரத்திலே "ஆயுதமழையிலவா பெய்கிறது?" என்று சொல்லும்படி, அந்த மழையிலே அந்தக்கூட்டின் பகுதி மறைந்துவிட்டதாம்; அலைகடல் எழுந்து ஆகாயத்தை மறைத்துவிட்டது என்று சொல்லும்படி பொங்கி விட்டதாம். நாற்புறமும் வளைத்துக்கொண்ட ராக்ஷஸ சேனை அந்த அரக்கர்களை ராமன் லட்சுமணனுக்குக் காட்டினான். "முனிவன் சொன்ன ஆசாமிகள் அதோ!" என்று,

"கவடுடைய எயிற்றினர்
கடித்த வாயினர்
துவர்நிறப் பங்கியர்
சுழல்கண் தீயினர்
பவர்சடை அந்தணன்
பணித்த தீயவர்
இவர்" என இலக்குவற்(கு)
இராமன் காட்டினன்.

அந்த பிளவுபட்டகோரப் பற்களையும் செம்பட்ட மயிரையும் பார்த்ததும் பிறரைத் தின்று பிழைக்கும் ஆசாமிகள் என்று தெரிந்து விட்டதாம். மடித்துக் கடித்த உதட்டையும் வாயையும், உருட்டி விழிக்கும் சிவந்த கண்களையும் கண்டு, "அந்த நரமாம்ச பக்ஷணிகளின் அதிசயவேசம் தானென்ன! இந்தயாகத்தின் மீதும் முனிவர்கள் மீதும் என்ன பெருங் கோபம்!" என்று ஆச்சரியமாகக் காட்டுகின்றான் ராமன். நெருப்புப் பொறிகளைக் கக்கிய அந்த ராக்ஷஸர்களின் கோபாவேசக் கண்களைப் பார்த்ததும் லட்சுமணன் கண்களிலும் நெருப்புப் பொறி பறந்தது. அப்போது

### வாழ்க்கையில் நிம்மதி

# இன்பமெல்லாம் இன்பமுமல்ல; துன்பமெல்லாம் துன்பமுமல்ல

4

இறைவனை நமது தாய் தந்தையென்று கொண்டால் உலகத்தில் காணப்படும் துன்பங்களுக்கெல்லாம் யார் காரணம்? இது நியாயமான சந்தேகம்தான். ஆனால் இதைத் தெளிவுபடுத்த அமரர் 'கல்கி' கூறியுள்ள ஒரு குட்டிக்கதையை இங்கு குறிப்பிடலாம்.

ஒரு குடும்பத்தில் நாலைந்து குழந்தைகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று நோய்வாய்ப்பட்டிருக்கிறது. அக் குழந்தைக்குத் தாய் என்ன கொடுக்கிறாள்? கசப்பான மருந்து, பார்லிக் கஞ்சி, இத்தியாதி. மற்றக் குழந்தைகளுக்கோ விதம் விதமான சாப்பாடு. கசப்பு மருந்து கிடையாது. இதைக் கண்டு நோய்வாய்ப்பட்ட குழந்தை என்ன நினைக்கிறது. ''பார் நான் மெலிந்திருக்கிறேன். எனக்கு நோய் வேறு. ஆனால் இந்த அம்மாவோ எனக்கு நல்ல சாப்பாடு தருவதில்லை. போதாக்குறைக்குக் கசப்பான மருந்தைவேறு பருக்கி விடுகிறாள். அடம் பிடித்தால் அடியும் கிடைக்கிறது. ஆனால் தேகசுகமும் திடகாத்திரமும் உள்ள என் தம்பிகளுக்கும் தங்கைகளுக்கும் தினம் விதம் விதமான சாப்பாடு மிட்டாய் எல்லாம் கிடைக்கின்றன.''

இந்தக் குழந்தையின் நிலையில்தான் நாமும் இருக்கிறோம். தாயின் அன்பை அறியாது குமுறும் குழந்தைபோல் இறைவனின் அன்பை அறியாது, நமக்கு ஏற்படும் சிறுசிறு துன்பங்களுக்காக இறைவனை நோகிறோம். நாம் குழந்தைகள் என்பதையும் நம் சிற்றறிவு குழந்தைத்தனமானது என்பதையும் நாம் உணர்ந்து கொள்கிறோமில்லை.

உலகில் நடைபெறும் காரியங்கள் அனைத்தும் காரண காரியங்களுடனேயே நடைபெறுகின்றன. அந்தக் காரண காரியங்கள் நமது சிற்றறிவுக்கு எட்டாவிட்டால், நமது சிறிய குழந்தை மூளைக்குப் புரியாவிட்டால் அதற்காக இறைவனைத் திட்டுவதோ அல்லது உலகத்தைத் திட்டுவதோ எவ்வளவு அறியாமை.

பென்னம்பெரிய ஆலமரத்தில் சின்னஞ்சிறிய பழங்களும், சின்னஞ்சிறிய சுரைக்கொடியில் பென்னம்பெரிய காய்களும் இறைவன் எதற்காகப் படைத்தான்?

ஆலமரம் நிழல் தருவது. அதன்கீழ் நடமாடும் உயிரினங்களின் தலையில் பெரிய சுரைக்காய் அளவு பழம் விழுந்தால் என்ன ஆகும்? எனவேதான் நிலத்தில் படர்ந்திருக்கும் சுரைக்கொடியில் பாரமான காய்களை இருத்தி வைத்திருக்கிறான், இறைவன். இதுபோலவே மனித வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் ஏற்றத்தாழ்வாக அமைந்திருக்கின்றன. அறியாக் குழந்தைகளா நாம் இறைவனின் செயல்பற்றி விமர்சிப்பதும் இன்ப துன்பங்களைப்பற்றி எடைபோடுவதும் மகா மூடத்தனமானது.

நிழலின் அருமை வெயிலில் தெரியும். அதுபோலவே இன்பங்களின் சுகம் துன்பங்களின் மத்தியிலே தான் சுவைக்கும். துன்பங்கள் இருப்பதாலேயே இன்பந்தரும் மகிழ்ச்சியை நாம் அனுபவிக்க முடிகிறது,

உணவுக்கு எப்படிக் காரமும், உவர்ப்பும், புளிப்பும் சுவையூட்டுகின்றனவோ, அதுபோலவே வாழ்க்கைக்கும் உவர்ப்பும், புளிப்பும், காரமும் நிறைந்த அனுபவங்கள் சுவையூட்டுகின்றன. எல்லாம் இனிப்பு மயமாக இருந்தால் உணவு தெவிட்டிவிடும் அல்லவா? வாழ்க்கையிலும் எல்லாம் ஒரே இன்பமயமாக இருந்தால் வாழ்க்கை சுவையற்றுப் போய்விடும். பிரச்னைகள் துன்பங்கள் முதலியன ஏற்படும்போது அவற்றுடன் போராடி அவற்றை நாம் சமாளிக்கும்போது நமக்கு ஏற்படும் மனநிறைவுக்கும், மகிழ்ச்சிக்கும் உவமை கூற முடியாதல்லவா?

இந்த ஒரு இன்பத்துக்காகவேனும் வாழ்க்கையில் கண்டிப்பாகத் துன்பங்கள் குறுக்கிடவேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா?

இதற்கு மேலும் துன்பங்களின் அவசியத்தையிட்டு விளக்க வேண்டியதில்லை. இன்பமும் துன்பமும் சமம் என்ற எண்ணத்தை மனதில் பதித்துக் கொண்டால் துன்பத்தைக்கண்டு நாம் அஞ்சவேண்டியதில்லை.

சுடச்சுடரும் பொன் போன்றது மனிதவாழ்க்கை புடமிட்ட பொன்னுகை நம் வாழ்க்கை மாறவேண்டுமானால் துன்பம் என்னும் தீயில் அதைப் பழுக்கச்சுட்டு எடுக்கவேண்டும். துன்பத்தைக்கண்டு அஞ்சி ஓடும் நிலைமையை மாற்றி அதை மனமுவந்து வரவேற்கும் நிலைக்கு மனதைப் பக்குவப்படுத்த வேண்டும். வருவதெல்லாம் நன்மைக்கே என்ற மனப்பண்பு வேண்டும் 'நல்லகுருநாதன் நம்மை வருத்துவது. கொல்லவல்லக் கொல்லவல்ல, பொல்லாவினையறுக்க' என்றுரைக்கவேண்டும்.

**— திருமதி பார்வதி நாகலிங்கம் —**

துன்பத்தைக்கண்டு அஞ்சுபவன் கோழை. அதைக் கண்டு சிரிப்பவனே வீரன். 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற வள்ளுவர் கூற்றையும், 'மனதில் உறுதிவேண்டும்' என்ற பாரதியின் கூற்றையும் வாழ்க்கைக்கு வேண்டிய இரு தாரக மந்திரங்களாக நாம் கொள்ளலாம்.

வாழ்க்கை என்பது 'தகுதியுள்ள உயிரின் ஜீவிதம்' என்ற தத்துவத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. இது இயற்கை நியதி. இதை நாம் மீறமுடியாது.

இன்பமும் துன்பமும் சமம் என்று கண்டோம். ஆனால் இன்பமென்றால் என்ன துன்பமென்றால் என்ன என்று நாம் அறிவோமா?

குழந்தைகளுக்கு மரத்தின் இலைகள் அசைந்தாலும் அது இன்பம். பிள்ளைகளுக்கு புதுச்சட்டை ஒன்று கிடைத்துவிட்டால்இன்பம். கூலியாளுக்கு வேலை கிடைத்துவிட்டால்இன்பம். ஏழைக்கு உணவு கிடைத்து விட்டால் இன்பம். குடிகாரனுக்கு நிறையக் குடிப்பதில் இன்பம். இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

இப்படிப் பார்த்துக் கொண்டே போனால் இன்பம் என்பது உண்மையில் இன்பமேதானோ என்ற சந்தேகம் வந்துவிடும். இது போல்தான் துன்பமும். துன்பம் எப்படிப்பட்டது? கப்பல் கவிழ்ந்தால்தான் துன்பம் என்பதில்லை. கால் தூசு பெறாத பொருள் காணாமல் போய்விட்டாலும் துன்பம்தான்.

பரீட்சையில் சித்தி பெறாவிட்டால் சிலருக்கு வாழ்வே போய்விடும். தற்கொலை கூடச் செய்யத் துணிவார்கள். காதலில் ஏமாற்றம் ஏற்பட்டால் அப்பப்பா, தாங்கவே முடியாது. இந்த உலகமே அஸ்தமித்துவிடும். வேலை கிடைக்கவில்லை என்றால் துன்பம். வீடு இல்லை என்றால் துன்பம். கஞ்சி கிடைக்கவில்லையென்றால் துன்பம் காய்ச்சல் வந்துவிட்டால் துன்பம்.

ஆக இன்பம் துன்பம் என்பதெல்லாம் வெறும் பிரமை என்றே எண்ணத் தோன்றுகிறதல்லவா? இந்தக் கற்பனை உணர்வுகள் தானே மனிதனைப் போட்டுப் பேயாட்டம் ஆட்டிவைக்கின்றன. விந்தையிலும் விந்தை.

சரி இவையெல்லாம் சில்லறை விஷயங்கள். வாழ்க்கையைப் பாதிக்கும் மிகப் பெரிய துன்பங்களை ஆராய்ச்சி செய்து பார்க்கலாம். மனிதன் கற்பனை செய்து பார்க்கக்கூடிய மிகப் பெரிய துன்பம் மரணம். மரணத்திற்கு மிஞ்சியது வேறு என்ன இருக்கிறது?

ஆனால் உண்மையில் மரணம் ஒரு துன்பமா? சில வேளைகளில் துன்பங்களிலிருந்து விடுதலை தரும் இன்பமாகவே மரணம் அமைந்துவிடுகிறதல்லவா? அப்படியானால் மரணபயம் என்பது என்ன? அது ஒரு மனப்பிராந்தியே தவிர வேறில்லை. எப்படியிருந்தாலும் மனிதன் மரணத்தைக் கண்டு பயப்படவேண்டிய அவசியமென்ன?

''உறங்குவதுபோலும்
சாக்காடு
உறங்கி விழிப்பது
போலும் பிறப்பு''

உயிர் அழிவதில்லை. கூடு மட்டுமே அழிவது என்பதை நாம் அறிவோம். நம்மை விட்டுப் பிரியும் உயிர் எங்கும் போய்விடுவதில்லை. மீண்டும் இப் பூமியிலேயே வேறு ஒருகூட்டில் தோன்றுகிறது. (அல்லது வேறு ஒரு உலகில் தோன்றுகிறது) சமீபகாலமாக நடைபெற்றுள்ள ஆராய்ச்சிகளில் முந்தையபிறவி ஞாபகம் இருப்பதாகக் கூறும் சிலரது வாழ்க்கையை உன்னிப்பார்க்கில் இந்த உண்மை புலனாகும்.

பிரபஞ்சத்தில் அலைந்து திரியும் ஓர் உயிர் எப்படிப் புதிதாகப் பிறக்கும் ஓர் உடலில் புகுகிறது என்பதை மட்டும்தான் இன்னும் தெளிவுபடுத்த முடியவில்லை. உயிரற்ற ஓர் அணுவுக்கும் உயிருள்ள ஓர் அணுவுக்குமிடையிலுள்ள சங்கிலித் தொடர்பை எப்படி இன்னும் கண்டறிய முடியவில்லையோ அப்படியே உயிர் (ஆன்மா) உடலுக்குள் புகும் விந்தையையும் இன்னும் கண்டறிய முடியவில்லை. கண்டறியவும் முடியாது. ஏனெனில் அது சிருஷ்டி இரகசியம்.

ஆக ஒருவர் இறக்கும் போது அவர் எங்கோ வெளிநாடு செல்வது போன்ற ஒருமாற்றமே ஏற்படுகின்றது அவருடன் நாம் தொடர்பு கொள்ள முடியாது. ஆனால் அவர் நம்மைப்போலவே எங்கோ ஓரிடத்தில் வாழ்கிறார். இப்படி எண்ணிக் கொண்டால் மரணபயமும் மரணத்தால் குடும்பத்தில் ஏற்படும் துன்பமும் நம்மை விட்டுப் போய்விடும்.

எனவே மரணம்கூட மனிதனுக்கு ஒரு துன்பமில்லை. அப்படியானால் வேறு எது தான் துன்பம்?

பசி துன்பமா? வேதனை துன்பமா? பிரிவு துன்பமா? நோய் துன்பமா? எது துன்பம்? மனதில் உறுதி இருந்தால், தெளிவு இருந்தால், இறைபக்தி இருந்தால் இவை எதுவுமே துன்பமில்லை. இவையெல்லாம் வெறும் பிரமை. அற்பசலனங்கள். தூசுக்குச் சமமானவை.

(தொடரும்)

செவிக்கு''

இம்மக்கள் மெய்தீண்டலினால் உடலின்பந்தையும், தமமழலைச் சொல்லைப் பிறர் கேட்பதனால் செவிக்கின்பத்தையும் கொடுக்கின்றனர். இக்குழவிச் சுவைகள் நீடித்து நிற்பன அல்ல. பருவத்தோடு மறைவன என்ற கருத்தால், 'உடற்கின்பம்', 'செவிக்கின்பம்' எனப் புற அளவோடு நிறுத்துகிறார். இப்புறச் சிறு இன்ப உணர்ச்சியும் கூட பிறருடைய குழந்தைகளின் மெய்யைத் தீண்டுவதனால், சொல்லைக் கேட்பதனால் தோன்றுவதில்லை என உலகியல்பு காட்டுகிறார்.

தலைவி கண்ணுக்கு மை தீட்டும்போது கண்களிலே தான் கோலை வைத்திருந்த போதும் அந்தக் கோலை கண்காண முடிவதில்லை. அது போல தலைவன் இல்லாத விடத்து அவனது குறைகள் அவனது பிரிவினால் பெரியனவாகத் தோன்றினும் அவனைக் கண்டபோது அப்பழிகளெல்லாம் தலைவியின் உள்ளத்திநின்று மறைந்து விடும். காரணம் அவன் மேல் கொண்ட அழியா அன்புதான். தலைவியின் இவ்வியல்பை ஒரு குறளிலே சித்தரிக்கிறார் வள்ளுவர்:

# கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் கோவில்

மாருதப்புரவீகவல்லி ஈழநாட்டின் வடபாலுள்ள கீரிமலையென்னும் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தும் கோயிற்கடவை என்னும் இடத்திலே சுப்பிரமணியப் பெருமானுக்கு ஆலயம் அமைத்து சோழநாட்டிலிருந்து சுப்பிரமணிய விக்கிரகமும் பூசைசெய்வதற்கு அர்ச்சகரையும்வருவித்து உரிய முறைப்படி பிரதிட்டைசெய்வித்து வழிபடக் குன்மநோயானது நீங்கப்பெற்றும், குதிரை முகம் மற்றவர்களுடைய பார்வைக்கு மாறியும், மாருதப்புரவீகவல்லியின் பார்வைக்கு மாறாதிருந்தமையாலும் மனம் வருந்தி அதற்குரிய காரணத்தை ஆராயும் போது, விநாயகப்பெருமானை முதல் வழிபாடுசெய்யாததினாலேயே இக்குறையானது நிகழ்ந்தது என அறிந்து, தான்செய்த தவறுக்காக ஏழு விநாயக விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்வேன் என நினைத்து முதலாவதாகக் கொல்லங்கலட்டி என்னும் இடத்திலே ஒரு விநாயக விக்கிரகத்தினையும் பின் வரத்தலம் (பன்னாலை) அளகொல்லை, கும்பளாவளை, பெருமாக்கடவை (அளவெட்டி) என்னும் இடங்களிலும் ஒவ்வோர் விநாயக விக்கிரகத்தினையும், பிரதிட்டைசெய்யக்குதிரைமுகமானது தனது பார்வைக்கும் இல்லாது மறைந்து அதிக அழகுடன் முகமானது பொலிவதைக் கண்டு அத்தலத்திற்குப் பெருமாக்கடவையென்னும் காரணப் பெயரையும் (பெரிய குதிரை முகம் நீங்கிய இடம்) இட்டு தான் செய்த சபதத்தின்படியே ஆலங்குளாய், கல்வளை என்னும் இடங்களிலும் இரு உருவங்களைத் தாபித்தார் என்பர். கொல்லங்கலட்டி விநாயகப்பெருமானே மாருதப்புரவீகவல்லி முதலாவதாக தாபித்த விநாயக விக்கிரகமாகும் இதன் வரலாறு விரிவஞ்சி இங்கு கூறப்படவில்லை.

வருடந்தோறும் இவ்வாலயத்தில் வைகாசி மாதத்துப் பூரணையில் தீர்த்தோற்சவமாக அமையும் வண்ணம் பத்துநாள் திருவிழா நடைபெற்றுவருகின்றது.

தேர்த்திருப்பணிச் சபையோரால் புதிதாக அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய தேர் ஒன்று அறுபத்தைந்தாம் ஆண்டு செய்துமுடிக்கப்பெற்று, வெள்ளோட்டமும் ஓடி, அடுத்த வைகாசி மாதம் முதல் ஒவ்வொரு வருடமும் அத்தேரிலேயே விநாயகப்பெருமான் வீதி வலம்வருகின்றார்.

கொல்லங்கலட்டி இளைஞர்களின் சிவதொண்டின் மூலமும்பெரியார்களின்பேருதவியாலும் இக்கோவிலுக்கு மேற்குப்புறத்தில் அமைந்த கேணியை திருத்தியமைத்து அதில் இவ்வருட தீர்த்தத் திருவிழா மிகச் சிறப்பாக நடந்தேறியது.

—அடியான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பின்னத்துள் பின்னம்

சிவா. சுப்பிரமணியம்

அந்தக் கல்லூரியின் காலை வகுப்புகள் ஆரம்பமாவதற்கான மணி அடிக்கின்றது. வருணபகவானின் பராமுகத்தால் வெந்து வெடித்துப் புழுதி பறந்து கொண்டிருக்கும் வெட்ட வெறுவெளியில் விளையாடிக் கொண்டிருந்த இறுவர்கள் சிவந்த மண்ணின் சேர்க்கையால் செங்குருதியாக மாறியிருக்கும் வியர்வையைக் கையாலே வழித்தெடுத்துக் கால்சட்டையின் பின்பக்கத்திலே துடைத்துவிட்டபடி தங்கள் வகுப்பறைகளை நோக்கி ஓடுகின்றார்கள். கல்லூரி மணியின் ஓசை மாணவர்களை மட்டுமல்லாமல் இன்னொரு 'ஆத்மா'வையும் ஓரளவு சலனப்படுத்தியது.

''எட்டேமுக்காக்கு அடிக்கிற பள்ளிக்கூடமணியும் அடிச்சிட்டுது. இந்த நாசமாய்ப்போன வசுவை என்னம் காணயில்லை.''- கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலமாகக் காத்து நின்றதால் உண்டான 'குமைச்சல்' உரத்த முணுமுணுப்பாக மாறுகின்றது.

செக்கச்சிவந்த செம்மண், வளம் செறிந்த பொன் மண் என்று விவசாயிகள் மத்தியிலே ஒரு அபிப்பிராயம் உண்டு. சிவந்தமண் செறிந்த கிராமமான வசாவிளானில் ஏர்பிடித்து வாழ்பவர்கள் எல்லோரும் வசதியாக வாழாது விட்டாலும் முற்றுமுழுதாக நலிந்து போனவர்கள் இல்லை. அந்த மண்ணின் வளத்துக்குத் தம்பிப்பிள்ளை ஒரு மகத்தான உதாரணம். ஊரிலேயே ஒரு 'பெரிய புள்ளி' என்று அழைக்கப்படும் அவர் பொருளாதார ரீதியில் மேல் மத்தியதரக் கால்சட்டைக்காரரிலும் பார்க்க உயர்ந்தபடியில் நிறுத்திவைக்கப்படவேண்டியவர். நல்ல தோட்ட நிலங்களையெல்லாம் பலவிதமான 'தில்லுமுல்லுகளால்' தன்

கொடுமுடியிலே அவரை வைப்பதற்குச் சாதி, பெரிய இடத்தொடர்பு, மக்கள் மதிப்பு என்ற தகைமைகள் வேண்டுமல்லவா? சாதியைப் பொறுத்த அளவில் அவருக்குக் கவலையில்லை. சுண்டி எடுத்த சுத்தவெள்ளாளனிலும் மெத்தப்பெரிய மேலை வெள்ளாளனான கந்தப்புவிதானையின் நேர்ப்பரம்பரையிலே பிறந்தவர் அவர். பெரிய இடத்தொடர்புக்காக 'அடிகொடினை' அலசி ஆராய்ந்து சில 'பெரிய' மனிதர்களுடன் 'போக்குவரத்து' வைத்துக்கொண்டிருக்கின்றார். மக்களிடம் மதிப்பைப் பெறவேண்டுமென்பதற்காக ஆலயத் திருப்பணியில் அயராது உழைப்பவர். கோவில் சம்பந்தப்பட்ட எந்தவேலையானாலும் தம்பிப்பிள்ளையை முன்னணியில் காணலாம். கோவில்களில் தேவாரம் பாடுவது தன்னுடைய ஒரு முக்கியகடமை என்று கருதுவதால் அவ்வூர் மக்கள் அவரைத் தேவாரத் தம்பிப்பிள்ளை என்று பொதுவாக அழைப்பர். அவர் தேவாரம்பாடுகையில் பார்க்க வேண்டுமே. எண்ணங்களை அடக்கியொடுக்கி மூக்கு நுனியைப் பார்த்தவண்ணம் தேவாரம்பாடத் தொடங்கி விட்டாரென்றால் அவரது புறக்கண்கள் வெறும் புண்களாக அகக்கண்ணே தனிக் கண்ணாகி விடும். ஒருநாள் கண்களை மூடியபடி தில்லையப்பலத்திலே திருநடம்புரியும் தில்லைநடராசனைச் 'சொற்றுணை வேதியன் சோதிவானவன்' என்று உருக்கமாகப் பாடிக்கொண்டிருந்த வேளையில் கட்டைக் கந்தனின் காலொன்று

திருநீற்றுப்பூச்சுக்கு நடுவிலே பூரணசந்திரச் சந்தனப் பொட்டு... சட்டை போடாத வெறும் மேனியிலே பட்டைபட்டையாகத் திருநீறும் சந்தனமும்... இவையெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து தம்பிப்பிள்ளை ஒரு சைவப்பெருங்குடி வேளாளன் எனக் கட்டியங்கூறின.

பஸ்ஸைப் பார்த்து நின்று சோர்ந்து போன தம்பிப்பிள்ளை கல்லடிபட்டநாயைப் போலக் காலை உயர்த்தி வேட்டியைத் தூக்கி மடித்துக் கட்டியநேரத்தில் 'உன்னை விட்டகலேன்' என்று பின்னங்குதிக்காலில் ஒட்டிப்பிடித்திருக்கும் சிவப்பு மண் கண்ணுக்குத் தெரிய, அது சின்னக் குழந்தைகள் நாபட்டு நலிந்து போகாமல் கன்னக்கதுப்பிலே சின்னஞ்சிறு கறுப்புப் பொட்டொன்று இடுவதை ஞாபகப்படுத்தியது.

தம்பிப்பிள்ளையின் தனிமையைப் போக்குவதற்காக வருவதுபோலப் பொன்னுத்துரையும் பஸ்ஸுக்கு வந்துகொண்டிருக்கிறார். பொன்னுத்துரைக்குத் தம்பிப்பிள்ளையைக்கண்டதும் ஒரே

றதெண்டு இருக்கிறன். அதைத்தான் ஒருக்காக் கதைப்பமெண்டு......''

பொன்னுத்துரையின் பார்வை வீதியின் ஓரத்திலிருக்கும் ஒரு சாக்கு முடிச்சின்மேல் விழுகின்றது. மிகவும் அக்கறையோடு சுற்றிக் கட்டப்பட்டிருந்தபோதும் வசாவிளான் சீல் இருக்க வேண்டியது அவசியமெனக் கருதியதாலோ என்னவோ அந்தச்சாக்கு செம்மண் படிந்து சிவப்பாக இருந்தது.

''உதென்ன தம்பிப்பிள்ளையண்ணை சாக்கிலை?''

''நாலைஞ்சு ராசவள்ளிக் கிழங்கு கொண்டுபோறன். அந்தாளுக்கு ராசவள்ளிக் கிழங்கெண்டால் உயிர்.''

கொஞ்சநேரம் மௌனம். மௌனம் எப்போதுமே தம்பிப்பிள்ளைக்குப் பரம சத்துராதி. எதையாவது பேசிக்கொண்டே இருக்க வேண்டும்.

''மெய்யே பொன்னுத்துரை, உவன் உன்ரை மச்சானும் கண்ட நிண்டவங்களையெல்லாம் கோயிலுக்கை விடவேணுமெண்டு சொல்லிக்கொண்டு திரியிறனும்.''

'' அதையேன் கேக்கிறியள் அவன் சொன்னாலும் கேக்கிறானில்லை. ஆரோ அவனுக்குக் கீ குடுத்து விட்டிட்டான்கள்.''

''உங்கை கொஞ்சப்பேர் திரியினை கண்டியோ, அவையைப் பிடிச்சு வரிசையாக விட்டுச் சுட்டால்தான் நாங்கள் மரியாதையோடை உலாவலாம். எங்கடை விடலைக் காலத்திலையும் உந்த விண்ணாணத்தைக் கேட்டனியே. இப்ப நான் வாறபோது அவன் கந்தன்ரை பெடியன் எனக்கு முன்னாலை தோளில் சால்வையோடை போறான். உந்த அநியாயம் பொறுக்காமல் தானே கடவுளும் மழை தண்ணியைத் தரயில்லை.''

பஸ் வருவதைக் கண்டதும் பேச்சு இடையிலே முறிகின்றது.

பஸ்ஸிற்குள் ஏகப்பட்ட நெருக்கம். தம்பிப்பிள்ளையால் நின்று பிரயாணம் செய்ய முடியாததால் இருவரே இருந்து பிரயாணம் செய்வதற்காக அமைக்கப்பட்ட ஆசனத்தில் ''தம்பி கொஞ்சம் அரக்கி இருமோனை'' என்று ஆதரவாகக் கேட்டு மூன்றாவது ஆளாகச் சமாளிக்கின்றார். அதன்பிறகு அவர் எதுவும் பேசவில்லை. அருகிலிருந்தவரை நெரித்தபடி தான் விழாமலிருப்பதிலேயே கவனமாக இருந்தார்.

பஸ் ஆரியகுளம் சந்தியை அணுகிக் கொண்டிருக்கும்போது அருகிலிருப்பவர் பின் ஆசனத்திலிருப்பவரோடு கதைத்தவற்றில் சில வார்த்தைகள் தம்பிப்பிள்ளையின் காதிலே பறையடிக்கின்றன.

''இண்டைக்கு இந்தப் பயணத்தாலை சீவலுக்கும் போகயில்லை. வாடிக்கைக் கள்ளுக்காறர் வந்திட்டுத் திரும்பப் போகினம்.''

'எட- இவனுக்குப் பக்கத்திலையே இவ்வளவு நேரமும் இருந்தனான்.'- தம்பிப்பிள்ளை எழுந்து நின்று கொண்டார்.

தம்பிப்பிள்ளை அம்பலவாணர் வீட்டை அடைந்தபோது பறக்கும் வெள்ளிக் கம்பிகளாய் நரைத்துப் போன தலையும், தங்க பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடியுமாக அம்பலவாணரின் தாய் வாசலில் நின்றாள். கண்கள் சாக்கு முடிச்சின்மேலிருக்க, வாய் புன்னகை செய்தபடி ''இப்பதான் எங்கடை நினைவு வந்துதோ'' என்று தம்பிப்பிள்ளையை வரவேற்கின்றாள்.

கொஞ்சநேரத்திற்குப்பின் தம்பிப்பிள்ளையின் குடும்பத்தைப் பற்றிக் கரிசனையோடு விசாரணை தொடங்குகின்றது.

''மெய்யே தம்பிப்பிள்ளை வீட்டிலை எல்லாரும் சுகமாக இருக்கினமே? மகளுக்கு ஒரு சம்மந்தத்தைச் செய்யிறதுக்கு ஏன் பாத்துக் கொண்டிருக்கிறாய்?''

''அதுதான் கதைப்பமெண்டு வந்தனான்.''

''ஏதும்உதவிவேணுமெண்டாப் பயப்பிடாமல்சொல்லு என்ன உதவியெண்டாலும் நான் செய்யிறன்.''

தம்பிப்பிள்ளை மெதுவாகத் தன் கதையைச் சொல்லி முடிக்கிறார்.

''இஞ்சை தம்பிப்பிள்ளை எல்லாத்துக்கும் ஒரு அளவு வேணும். அளவுக்கு மிஞ்சி நினைக்கக்கூடாது. உன்ரை மகளைக்கட்ட அவன் எப்பிடிச் சம்மதிப்பான்? இஞ்ச பார், கமத்தைப்போல ஒரு தொழில் இருக்கே. இண்டைக்கு இவ்வளவு சொத்தையும் என்னண்டு நீ உழைச்சனி. அப்பிடியில்லையெண்டு உத்தியோககாரனைத்தான் செய்ய வேணுமெண்டால் உன்ரை நிலைமைக்குத் தக்கினமாதிரி எங்கயாவது பார்த்துக் கெதியாச்செய். பெட்டையை வச்சுக்கொண்டிருக்காதை.''

சாக்கினுள்ளேயிருக்கும் இராசவள்ளிக் கிழங்குகள் இந்தக் கல்யாணப் பேச்சைக்கேட்டுச் சிரிக்கின்றனவா?

(யாவும் கற்பனை)

---

# (கை) மாறு!

— இளம்பரணன் —

வலதுகைச் சிறுவிரல் தனிலொரு
பருவந்திட
வலிந்து நானும்
இடதுகைப் பெருநகங் கொண்டு
என்னால்
இயலு மட்டும்
பருவைத் தகர்த்திட எண்ணினன்
அந்தப்
பரு வதுவும்
அருகிருந் தடம்பிடித் தாகாத செய்யும்
குழந்தை யதாய்ப்
பெருகி வருத்தம் மிகத்தந்து நின்றது
பெருந் தொல்லையே!

கடுகள வேனும் தகராத அப்பரு
கன்றி மேலும்
நகவிஷம் பட்டது போலும் விரலது
நைந்து பட்டுக்
குறுகிப் பெரியதோர்
கொழுக்கட்டையாகிப்
பெருத் திடவே
வலியது தாங்க முடியலை என்னால்
வருத்த மிந்தப்
பென்னம் பெரிய உடலிது தன்னிலச்
சிறு விரலும்
என்னென்று தந்தது வேதனை
கொஞ்சமும்
சிறி தல்லவே!

வேதனை தாங்காது விரைந்தனன்
வேறொரு
வகையு மின்றி
ஓதிடும் அரசினர் மருத்துவப்
பெருமனை
தன்னை நாடி
நோயது பலபல வாயங்கு திரண்டனர்
நூறு நூறாய்;
கூடிய டாக்டரும் சோதனை செய்தார்
குறித்தார் பல
ஊசியும் மருந்தும் உட்கொளக்
குளிகையும்
என்று சொல்லி;

ஊசியு மிட்டு மருந்துங் கட்டினர்
உபத் திரவம்
போதிய தாய்விட ஒன்றும் புரியலை
புசிப் பதுவும்
ஏலாத தாகிய என்னிலை கண்டந்த
இடது கையும்
சால உதவிட அன்பின் துணைவழி
ஆகி நின்று
ஏலுங் கருமங்க ளாற்றியென் துயரைப்
போக் கியதே!

தாயினைப் போலிங்கு இதுவரை நாளும்
தாங்கி யெனை
ஊணினை ஊட்டி உடையது தரிக்க
உதவி யின்னும்
கோணலும் மாணலுமாய் எழுதிக்
குவித்திட
உதவிய கை
நோயுற் றதுகண்டு நொந்த திடதுகை
நோய் அகலத்
தாயாகி நின்று சுகந்தந்து காக்க
விளைந் ததுவே!

கைமாறு வேண்டா உதவியைச்
செய்திடக்
கை யதுவும்
கைமாற வேண்டிக் கைமாறி நின்று
கை தரவே
சும்மா இருந்து சுகங் கண்டது
கைச் சிறுவிரலும்
இம்மா நிலம் பெரிததனிலும் பெரிது
அன் பெனவே
கைமாறு செய்த கையிதன் பெருமை
கணக் கில்லையே!

---

# நானும் எழுத்தும்

கதைக்குக் கருத்தேடி அலைந்து என் கால்கள் வலியெடுத்துவிட்டன. சே! இந்தக் கதை எழுதுகிற வேலைக் குச் செல்லும் [illegible] தலையில் ஒரு தேசிக்காய்[illegible] சாக்கைத் தூக்கி வைத்துக்

பாழாய்ப்போன கதை எழுதும் வேலையை விட்டுவிட்டு ஏதாவது கூலிவேலைக்காவதுபோய் நாலு சதம் சம்பாதிப்போமே என்றால், [illegible] காலும்தான் வேலை செய்கிறதே தவிர, மனமும் கண்ணும் கதைக்குஏதாவது

யிருந்தபோதிலும், கவிதையின் உட்பொருளும் புளிக்கப்புளிக்க அவர்கள் பிழிந்து தள்ளும் பழைய கதையாகவே இருந்துவிட்டது. எனக்கு ஒருமாதிரியாய்விட்டது. புதுமையாக ஏதாவது எழுதினால்தானே

முற்றாக உணர்கிறேன். படாரென கதிரையைப் பின்னே தள்ளி, எழுந்து தலையைக் கிளறியபடி அறைக்குள் குறுக்கும் நெடுக்கும் நடந்தேன். என் சுண்டங்காய் மூளையை புடலங்காயாக நீளவிட்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிள்ளையைக்கண்டதும் ஒரே

...தியில் மேல் மத்தியதரக் கால் சட்டைக் காரரிலும் பார்க்க உயர்ந்தபடியில் நிறுத்திவைக்கப்படவேண்டியவர். நல்ல தோட்ட நிலங்களையெல்லாம் பலவிதமான 'தில்லுமுல்லுகளால்' தன் ஏகபோக உடைமையாக்கிக் கொண்ட சின்னப்புவின் ஏக புத்திரன் தான் தம்பிப்பிள்ளை பாவமும் பழியும் தந்தையைச்சேர விளைச்சல் நிலங்கள் பரம்பரைச்சொத்தாக மைந்தனைச்சேர்ந்தன இன்று தம்பிப்பிள்ளை அந்த மண்ணைக்கிளறி, அது மலர்ந்து சிரிக்கும்போது தன் வாழ்க்கையும் மலர்வதைக் கண்டு மகிழ்ந்து சிரிக்கின்றார்.

எவ்வளவுதான் பணம் சேர்ந்தபோதும்கமக்காரனை 'அந்தஸ்து' அணுகுவதில்லை. அதை அவன் மிகவும் சிரமப்பட்டுத்தேடிப் பெற்றுக்கொள்ளவேண்டும். தம்பிள்ளைக்குத் தன் சொந்தக் கிராமத்திலேயாவது தான் மதிக்கப்படவேண்டும் என்று ஒரு ஆசை. அவரிடமிருக்கும் பணத்தோடு பக்கபலமாக நின்று தோள் கொடுத்துத் தூக்கிச்சமுதாயம் என்ற கோட்டையின்

கந்தனின் காலொன்று

## சிவா. சுப்பிரமணியம்

கோவிலின் உள் மண்டபத்தினுள் இருந்ததை 'அகக்கண்' காண...... தம்பிப்பிள்ளையின் உள்ளம் கொதித்து, உச்சி விறைத்துக் கந்தனைக் கையாலும் காலாலும் அடித்து நொறுக்கியகாட்சி நேற்றுநடந்ததுபோல இருக்கின்றது. இவையெல்லாம் பழங்கதைகள். இப்போது அந்த தம்பிப்பிள்ளை மத்திய மகாவித்தியாலயத்திற்கு முன்னால் வீதியிலே பஸ்ஸிற்காகத் தவம் செய்கின்றார்- (அவரைப் பொறுத்த அளவில்) சர்வசம்பூரண அலங்காரியாக.

சிவந்தமண்ணின் தாராள மனப்பான்மையால் செம்பட்டையான தலைமயிரை வஞ்சனையின்றி வழிந்தொழுக எண்ணெய் பூசிவாரி இழுத்துச்'சொடுக்கிக்' கட்டிய சுண்டங்காய்க் குடுமி... நெற்றி நிறைந்த ஆனந்தம். பஸ் வரத்தாமதமாகினாலும் 'தம்பிப்பிள்ளை அண்ணையின் 'லெக்சரை'க் கேட்டுக்கொண்டிருக்கலாம்' என்பதில் ஒரு திருப்தி.

தனக்கு ஒரு துணை வருவதையிட்டு தம்பிப்பிள்ளைக்கும் பரமசந்தோஷம்,

'பொன்னுத்துரை, துலைப் பயணம் போலை''.

''ஒருக்கா பட்டணம் போயிட்டு வரவேணும். தம்பிப்பிள்ளையண்ணை துலைக்கோ''.

''நான் உவர எங்கடை அம்பலவாணர் வீட்டை போறன்''

''எந்த அம்பலவாணர்?''

''உவர்தான் எங்கடை அப்புக்காத்து அம்பலவாணர்.''

'ஏதும் வழக்குக்கணக்கே?'

''எனக்கென்ன வழக்கு. அவர் எங்கடை சொந்தக்காரன்தானே.''

'அப்புக்காத்து' அம்பலவாணர் தவறுதலாக யாழ்ப்பாணத்திலே பிறந்துவிட்ட ஒருவர். சீமைக்குப் போய்ப் படித்த ஒரே காரணத்தால் சொந்தஊர் மக்கள் எல்லோரும் மந்தைகள் என்ற மனப்பான்மையோடு வாழ்பவர். அம்பலவாணர் என்ற பெயர் தன்னைத் தமிழன் என்று காட்டிக் கொடுத்துவிடுவதாகச் சிலசமயம் அவர் உள்ளூரக் கவலைப்படுவார்.

அம்பலவாணருடன் தொடர்பு வைத்திருந்தால் தனக்குப் பெருமை என்பது தம்பிப்பிள்ளையின் எண்ணம்.

''அப்பிடியே சங்கதி.''- பொன்னுத்துரைக்கு அதிசயமாக இருக்கிறது.

''பின்னை, எங்கடை சின்னுச்சிப் பேத்தியின்ரை புருஷன்ரை சிறியதாய் முடிச்ச வழியாலை அவர் எங்களுக்குச் சொந்தம். அவரெண்டாலென்ன அவ தாய் மனுஷியெண்டாலென்ன என்னைக் கண்டவுடனை வலுவாரப்பாடு. அதுதான் ஒரு நல்ல விஷயமாய் போறன். உவள் என்ரை மூத்தவளுக்கு வயதும் வந்துட்டுது அம்பலவற்றை பெடியனைத்தான் அவளுக்குச் செய்யி

## வள்ளுவன் வள்ளல்

— கரவை கிழார் —

சிந்தனைச் செந்தேன் பெய்து
சீரிய அனுப வத்தை
செந்தமிழ்ப் பூவில் தந்த
செம்மனச் சான்றோன் பாரின்
அந்தமில் அகத்தில் தோன்றும்
அத்தனை உணர்ச்சி எல்லாம்
சந்ததம் பண்பா டெய்த
சாற்றினன் குறள்வெண் பாக்கள்

எந்தவோர் மதமும் ஏற்கும்
எழில்மிகு கருத்தை ஈந்து
வெந்தழல் வேத னையால்
வேகிடும் உளங்க ளெல்லாம்
நொந்துமே நோய்வாய்ப் பட்டு
நாளுமே இழியா வண்ணம்
கந்தம்சேர் மருந்தாய் வாழ
கரு, உரு கொடுத்த வள்ளல்

வள்ளுவர் மாண்பைப் பாரோர்
வாழ்த்தியே என்றும் போற்றி
உள்ளத்தால் உயர்ந்து நிற்கும்
உயர்தனிப் பண்பை ஓர்ந்து
கள்ளத்தால் பொய்க்கா நெஞ்சில்
காரிருள் ஓட்ட வல்ல
தெள்ளிய ஒளிவெள் ளத்தை
தேக்கியே இன்பங் காண்பர்.

கதைக்குக் கருத்தேடி அலைந்து என் கால்கள் வலியெடுத்துவிட்டன. சே! இந்தக் கதை எழுதுகிற வேலைக்குச் செலவிடும் நேரத்தை தலையில் ஒரு தேசிக்காய்ச் சாக்கைத் தூக்கி வைத்துக் கொண்டு, நாலு ரோட்டு சுற்றினால் ஏதாவது சாப்பாட்டுக்காவது வந்து சேரும். நான் பிறந்தமுகூர்த்தம் இப்படியாகிவிட்டது.

எழுதும் வேலையை விட்டுவிட்டு ஏதாவது கூலிவேலைக்காவதுபோய் நாலு சதம் சம்பாதிப்போமே என்றால், கையும் காலும்தான் வேலை செய்கிறதே தவிர, மனமும் கண்ணும் கதைக்குஏதாவது கருக்கிடைக்கிறதா என்று தாடே தேடி அலைந்து கொண்டிருக்கிறது. இந்த லட்சணத்தில் பொறுப்பேற்ற வேலையைச் சரிவரச் செய்யத்தான் முடியுமா?

# ஹரிஜன் என்றால் கடவுளின் ஆள்

'தீண்டாதாரை'க்குறிப்பதற்காகஉபயோகிக்கப்படும் 'அந்தியஜ' (கடைசிப்பிறப்பாளர்) என்ற வார்த்தைக்குப் பதில் 'ஹரிஜன்' (கடவுளின் ஆள்) என்ற வார்த்தையை உபயோகிக்குமாறு அன்றொருநாள் ஒரு நண்பர் எனக்கு யோசனை கூறினார். நரஸின்ஹ மேத்தா என்ற பெரிய மஹான் கையாண்ட சொல்லது;'நாகர்பிராமண' சமூகத்தைச் சேர்ந்த அவர் தம் சமூகம் முழுவதன் எதிர்ப்பையும் புறக்கணித்து 'தீண்டாதாரை'த் தம்மவர்களாக ஏற்றுக்கொண்டார். இத்தகைய மாபெரும் மஹான் உபயோகித்ததால் பவித்திரமடைந்திருக்கும் வார்த்தையைக் கையாள்வதில் நான் மகிழ்ச்சிகொள்கிறேன். அதோடு நீங்கள் நினைக்கக்கூடியதை விடவும் ஆழமான பொருளை அது எனக்குக் காட்டுகிறது. நம்முடன் ஒப்பிட்டால், 'தீண்டாதவன்' உண்மையிலேயே ஹரிஜன்தான் — ஹரியின் ஜனம்தான் என்றும், நாம் 'துர்ஜன்'- கெட்டஜனங்கள் என்றும் நான் கருதுகிறேன். ஏனெனில், நாம் வசதியுடனும் சுத்தமாகவும் வாழ்வதற்காகத் 'தீண்டாதவன்' சேற்றில் உழன்றுஉழைத்து தன் கைகளை அசுத்தப்படுத்திக்கொள்கிறான்; நாமோ அவனை அடக்கி ஒடுக்குவதில்ஆனந்தம்கொள்கிறோம். இந்தத் 'தீண்டாதாரி'டம் இருப்பதாக நாம் குறிப்பிடும் குறைபாடுகளுக்கெல்லாம் நாம்தான் காரணஸ்தர்கள். நாமும் ஹரிஜனங்களாவதற்கு இன்னமும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு இழைத்த பாபத்துக்காக நாம் மனப்பூர்வமாய் கழிவிரக்கம் கொண்டால்தான் அவ்வாறு மாறமுடியும். (யங் இந்தியா-1931, ஆகஸ்ட் 6.)

ஹரிஜன் என்றால் 'கடவுளின் ஆள்'' என்றுஅர்த்தம். கடவுளை நண்பரற்றவர்களின் நண்பனென்றும், தீனபந்து என்றும், அனாதை ரட்சகன் என்றும் உலகத்தின் மதங்களெல்லாம் வர்ணிக்கின்றன. உலகின் மற்றப் பாகங்கள் ஒருபுறம் இருக்க இந்தியா சம்பந்தப்பட்டவரை, 'தீண்டாதார்' என்று வகைப்படுத்தப் பட்டுள்ள நான்கு கோடியே சொச்சம் ஹிந்துக்களைவிட, நண்பரற்வர்களும் தீனர்களும் அனாதைகளும் வேறுயார் இருக்கிறார்கள். ஆகவே கடவுளின் ஆட்கள் என்று யாரையாவது குறிப்பிடுவது என்றால், நண்பரற்ற, அனாதைகளான, தாழ்த்தப்பட்ட இவர்களைக் குறிப்பிடுவதுதான் பொருத்தமாக இருக்கும் ஆகவே 'நவஜீவனில்' 'தீண்டாதா'ரைக் குறிப்பிடுவதற்கு ஹரிஜன் என்ற சொல்லையே நான் எப்போதும் உபயோகித்து வந்திருக்கிறேன். பெயர் மாற்றத்தினால் அந்தஸ்தும் மாறிவிடும் என்பதில்லை. ஆனால் பெயரிலேயே இழிவையும் சேர்க்கின்ற ஒரு சொல்லை உபயோகிப்பதையாவது தவிர்க்கலாம். ஜாதி ஹிந்துக்கள் உளமார்ந்த நம்பிக்கை பெற்று, தம் மிச்சையாகவே இப்போதைய தீண்டாமையைக் கைவிடும்போது, நாம் எல்லாருமே ஹரி ஜனங்கள் என்ற பெயரைப்பெறலாம்; ஏனெனில் என்னுடைய தாழ்மையான கருத்துப்படி, ஜாதி ஹிந்துக்கள்அப்போது கடவுளின் அருளைப்பெற்று, கடவுளின் ஆட்கள் என்ற வர்ணனைக்குப் பொருத்தமானவர்களாகி விடுவர். (ஹரிஜன்-1933, பிப்ரவரி-11)

மகாத்மா காந்தி

## நானும் எழுத்தும்

— குமார் தனபால் —

உண்மையான எழுத்தாளனுக்குக் கருப்பஞ்சமேகிடையாதாம். அவன் காணும் இடமெல்லாம் கதைக்குத் தேவையான 'கரு' நிறைந்து கிடக்குமாம். ஆனால் நான் தினமும் ஊர் முழுவதும் அலைந்து திரிகிறேனே, அற்லீஸ்ட் ஓரணுப்பிரமாணக் கருவேனும் கிடைக்கக் கூடாதா? அப்படியானால் நான் ஒரு உண்மையான எழுத்தாளன் இல்லைஎன்பது தானே அர்த்தம்?

''கதை எழுதுவது கறி சமைக்கும் வேலையல்ல, அது ஒரு பிரசவ வேதனை''- என்று ஒரு பிரபல எழுத்தாளர் கூறியிருக்கிறார். நானும் இப்போது அந்தப் பிரசவ வேதனையைத்தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் எதுவும் பிறப்பதாய் தெரியவில்லையே.

முந்தாநாள் இரவு இப்படிப்பட்ட பிரசவவேதனையைத் தாங்கமுடியாமல் பேனாவையும் பேப்பரையும் எடுத்து வைத்துக்கொண்டு ஒரு கதையை எழுத ஆரம்பித்தேன்

''தன் வீட்டிற்குள் விறுவிறுவென நுழைந்த பாலு, படுக்கையில் போய்த்தொம்மென்று விழுந்தான்...''

இப்படி ஆரம்பித்தகதை அப்படியே நின்றுவிட்டது. படுக்கையில் தொம்மென்று விழுந்த பாலுஎழுந்திருந்தாலாவது கதையைத் தொடரலாம். இல்லை படுக்கையில் விழுந்தவன் உயிரைவிட்டாலாவது கதையை முடிக்கலாம். எனக்கு இரண்டும் கெட்டான் நிலை. என் கற்பனை வரட்சியை எண்ணி நானே திட்டித்தீர்த்துக் கொண்டேன். சரி, சரி கதைத்தான் போகட்டும். ஒரு கவிதையாவது எழுதலாம் என்ற எண்ணத்துடன் 'அடிவளவு' முழுவதும் அலைந்து, அலைந்து ஒரு கவிதையைத் தொடங்கினேன்.

''ஆசைதரும் காதலியே
அன்பே இன்பம்!
ஓசைதரும் இச்சொலியில்
ஒன்றிப் போனேன்.''

இந்த நாலு வரியையும் எழுதிவிட்டுத்தான் சிந்தித்தேன். கவிதைநன்றாகத்தான் இருக்கிறது. தற்காலக் கவி ஒருவருடைய கவிதைகளுக்குச் சமமாகக் கவிதையின் உட்பொருளும் புளிக்கப்புளிக்க அவர்கள் பிழிந்து தள்ளும் பழைய கதையாகவே இருந்துவிட்டது. எனக்கு ஒருமாதிரியாய்விட்டது. புதுமையாக ஏதாவது எழுதினால்தானே பேரும் புகழும் வரும்.

போனதெல்லாம் போகட்டும் இன்று ஒரு கட்டுரையாவது எழுதிவிடவேண்டுமென்ற எண்ணத்துடன் என் அறைக்குள் நுழைந்தேன். மேஜைக்கு முன்னால் கதிரையைஇழுத்துப் போட்டேன் 'புல்ஸ்காப்' தாள்களை எடுத்து மேஜையில் அடுக்கினேன். என் பேனாவைத்தேடி எடுத்து தாளின் கிட்ட பேனாவை வைக்கும் போது .. ஐயகோ... இப்போது நான் எதை எழுதுவேன்.

''கதை எழுதுவது கறி சமைக்கும் வேலை அல்ல அது ஒரு பிரசவ வேதனை!'' முன் படித்த அதே வாக்கியம் என் மூளையை மொய்த்துக்கொண்டு கண்ணாமூச்சி விளையாடியது. கண்களை இறுக மூடிக்கொண்டேன். நெற்றியை விரல்களால் தடவி விட்டுக்கொண்டேன்.

கதை எழுதுவது · பிரசவ வேதனையா? அடேயப்பா, இப்போதுதான் நான் அதைரென கதிரையைப் பின்னே தள்ளி, எழுந்து தலையைக் கிளறியபடி அறைக்குள் குறுக்கும் நெடுக்கும் நடந்தேன். என் சுண்டங்காய் மூளையை புடலங்காயாக நீளவிட்டேன். ம்... மண்டை சூடேறியது தான் மிச்சம். ஒரு சொல்லாவது பிறக்க வேணுமே.

சூடேறிய என் மூளையை ஆறவிடுவோம் என்ற எண்ணத்தில் என் மேஜையில் கிடந்த ஓர் ஆங்கிலப் பத்திரிகையின்மீதுகவனத்தைச் செலுத்தி நுனிப்புல் மேய்ந்துகொண்டிருந்தேன்.

அதில் ரசமான கட்டுரை ஒன்று. முற்றாக வாசித்துப் பார்த்தேன். நல்ல கருத்து. நல்ல உவமேயங்கள்.

ஆகா! இப்போதுதான் என் மரமண்டையில் மகத்தான ஒருயோசனை படீரென மோதியது. இந்த ஆங்கிலக்கட்டுரையை அப்படியே தமிழில் பெயர்த்து என் பெயரைப் போட்டு அனுப்பினால் என்ன..?

அட, அட! என் மூளையின் செழிப்பை நானே தட்டிக்கொடுத்தேன்.

பிறகென்ன.. பேப்பரும் பேனாவும் மோதத்தொடங்

(4-ம் பக்கம்பார்க்க)

## வந்துதித்தாள் வசந்த மகள்!

—பொலிகை ச. திருப்பதி—

கொடும்பனியால் கடுங்குளிரால் உடலநொந்தே இலையுதிர்த்த
கோதகன்ற மரங்க ளெல்லாம்
அடுக்கடுக்காய்த் தளிரீன்று அவற்றினுள்ளே மலருமீன்று
அழகுபல ஒருங்க மைத்து
இடுக்கணேதும் நேர்ந்திடாது வசந்தமகள் துயில்கொளற்காய்
இசைந்தநறும் பாய லிட்டு
நெடும்பொழுது காத்திருந்து பறவைகளாம் பாடகரை
நேயமுடன் அழைத்த தம்ம!

தென்றலிளங் காற்றசையத் தேசமெலாந் திரிந்தலைந்து
சிறந்தகுயில் கீத மோத
மன்றலுள மலரினங்கள் வாய்மலர்ந்து மாண்புமிகு
வாழ்த்தியம்பி ஆரத்தி செய்ய
நன்றலாத நாட்டினின்று நலிவுற்றே அகன்றேக
நலங்கனிந்து நாட்ட முற்று
மன்பதைகள் வாழ்ந்திடவே வந்துதித்தாள் வசந்தமகள்
மாபுவியில் மகிழ்கொள் வோமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘மேகலா’ தயாரித்துத் தரும்

# கலை அரங்கம்

## நாடக விமர்சனம்


### இ. பி. 2,000

நாகரிக வளர்ச்சியின் உச்சக்கட்டமும், அதன் பால் எழுகின்ற மனஉணர்வின் விபரீதமான போக்கும்ஏறக்குறைய30வது ஆண்டுகள் பின்னேக்கிப்பின்னேக்கிநின்று மனிதன் அறிவாற்றலை முடிந்தவரையில் யதார்த்தபாணியில் சித்தரித்திருக்கின்ற கற்பனையும் இந்த கி. பி. 2000ம் நாடகத்தின் கருப்பொருளாக அமைந்து நிற்கிறது. அழகும் நாகரிகமும் நிறைந்த கன்னிப்பெண் தனது கண் பார்வையால் ஆடவரை மயக்குவதும்சினிமாமோகம் கொண்டு தான் உளமார நேசித்தவனை ஊனநிலையில் வெறுத்து அவன் வாழ்வைப் பலியாக்குவதும், உண்மை புரிந்த அவள் ஹிரோசிமாவின் புதியகாதலன் நவீன பாணி சினிமா இயக்குநர் ‘அற்ரொம்’ கழுத்தை நெரித்து முடிவு கட்டுவதும் இதன் கதை.

சிரிக்கவைக்கும் ஹாஸ்ய வெடிகள் ஆபாசமற்ற முறையில் கையாளப்பட்டிருக்கின்றது. பொருள் அமைந்த வசனங்கள் கேட்பதற்கு ஆவலைத் தூண்டுகின்றது. பாட்டுக்கள் சினிமாப்பாணியை நினைவுபடுத்துகின்றன. கவிஞர் ஐயாத்துரை வேலைக்காரக் கண்ணுவாக வந்து பாடி நடித்து, அப்ளாஸ் பெறுகிறார். அணுயுகத்தை ஐ. நா. வரையில் கொண்டுசென்று அப்பாலும் சந்திரமண்டலம்வரை சென்று முடிவில் இது சினிமா ஒத்திகை என்று ஒரு போடு போடுகிறார்களே இந்த ‘உத்தி’ புதியது. சாமர்த்தியமாகக் கையாளப்பட்டமை இதன்பெரும் வெற்றி. பரமானந்தம் சுமாராக நடிக்கிறார். இவரது நடிப்பைவிட இவர் எழுதிய நாடகம் மனதில் நிற்கிறது. விஞ்ஞான விளக்கங்கள் நிறைய இருக்கின்றன. நடராசாவின் நடிப்பைப் பாராட்டலாம். சில இடங்களில் ‘அடங்காப் பிடாரியை நினைவுபடுத்துகிறார். குஞ்சிதபாதம் சோபிக்கவில்லை. நொண்டியாக நடிப்பது நன்றாகவிருக்கிறது. ஹிரோசிமா நன்றாகவே பெண் பாத்திரத்தை உணர்ந்து நடிக்கிறார். நடனம் நன்றாக விருக்கிறது. இடையிடையே கனகையா வந்துபோகிறார். சந்திரமண்டலக்காட்சி மயானகாண்டத்தை நினைவுறுத்துகிறது. தவறிய பெண்ணைத் தவறை உணரவைக்காமல் கழுத்தை நெரித்துக் கொலை செய்வதாகக் காட்டுவது தீமையைத் தட்டிக் கொடுப்பது போன்றதாகும்.. இது நல்லதல்ல.

முதல் இரண்டு காட்சியையும் வில்லுப் பாட்டையும் குறுக்கினால் நாடகம் விறுவிறுப்பாக அமையும். மொத்தத்தில் தரமான ஒரு நல்ல நாடகம் என்றால் மிகையல்ல.

— ஐயா ஜோசப்



### ‘திப்புசுல்தான்’ லோகநாதன்

சென்ற வாரத்தில் நம் நாட்டுக்கலைஞர் பகுதியில் அறிமுகம் செய்துவைத்தவர்: ‘திப்புசுல்தான்’ லோகநாதன்! யோகநாதன் என்று தலைப்பில் தவறுதலாக வெளியாகிவிட்டது. — மே’

### யார் செய்தகுற்றம்

எம். ஜி ஆர். - சிவாஜி படங்களுக்கு இங்கு தடைவிதிக்கவேண்டும் என்ற குரல் வேகமாக வளர்ந்து கொண்டுவருகையில் சில குட்டி சிவாஜிகளையும், எம். ஜி. ஆர். களையும் ஒருமேடையில் காணுவதென்றால் அதிசயம்தானே! கடந்த 29-5-69- ல் திருநெல்வேலி கலாஜோதி நாடகமன்றத்தார் மேடையேற்றிய ‘யார் செய்த குற்றம்’ நாடகத்தில்தான் இவர்களைச் சந்திக்கக்கூடியதாகவிருந்தது.

காதல்-போராட்டம்- வில்லனின் குறுக்கீடு - கல்யாணம் - சந்தேகம் - குடும்பத்தில் பிரிவு-மீண்டும் பிரிந்தவர் கூடல்; கதை என்னவோ பழைய பாணிதான் ஆனால் சில வசனங்களும் சிலரது நடிப்பும் இதயத்தைத் தொட்டுத்தான் சென்றன.

கதாநாயகனாக நடித்தவைத்திலிங்கத்திற்குத்தான் இங்கு முதலிடம். காதல், சோகம் இரண்டிலுமே இவர் விட்டுக்கொடுக்கவில்லை ரசிகர்களின் ‘அப்ளாஸுமே’ இவருக்குத்தான். வேலைக்காரனாக நடித்த விஜயரத்தினம் ரசிகர்கள் உள்ளத்தில் ஒரு நிலையான இடத்தைப் பெற்றார் என்பது உண்மை.

பின் கதாநாயகன் தேவசகாயம் இவ்வளவு அவசரப்பட்டு வசனங்களைப் பேசியிருக்கக்கூடாது. ‘அம்மா! சாந்தி!’ என இவர் அழைத்தது எங்கோ ஒரு படக்காட்சியைத்தான் நினைவூட்டியது. தர்மலிங்கமாக நடித்தவர்தான் நாடகத்தின் மேற்பார்வையையும் செய்தார் என்பது சொல்லாமலே விளங்கியது.

சாந்தியாக நடித்த விலாசினிக்கு எதிர்காலம் நல்லதாக உண்டு. காதல் காட்சிகள்- காதல் பாட்டு நடிப்பு இரண்டுமே ஜோர். ஆனால் ‘டுவிஸ்ட்’ அவசியம் தானா? வில்லன்களே வேண்டாம். ‘ஷிளப் டான்ஸ்’ வேண்டுமென்றே புகுத்தப்பட்டது தெரிந்தது. நோயாளியையும் டாக்டரையும் காட்டிக் கொடுத்தது ஸ்டெதஸ்கோப்தான். டாக்டர் ராமநாதனுக்கு வேசப் பொருத்தம் பொருத்தமாக இருந்தது. பாவைப்பிள்ளையை ஏன் குழந்தையாக்கினார்கள் குழந்தைக்கும் பஞ்சமா?

மைமக்; தேவையற்றவர்கள் குரல்கள் அடிக்

(5-ம் பக்கம் பார்க்க)

## நம்நாட்டுக் கலைஞர்



## புதுமை செய்யத் துடிக்கும் நித்தி!

புதுமை செய்ய வேண்டுமெனத் துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கிறார், இந்த நித்தி!

தனக்கென்றோர் தனிப் பாணியை அமைத்துப், பாட்டிசைக்கும் நம் நாட்டுக் கலைஞரான இவரைப் பலருக்கு நேரடியாகத் தெரியாவிட்டாலும், இவர் பாடிய பாட்டுக்களை ‘டேப்’பில் கேட்டு விட்டு பலர் முணுமுணுத்துக்கொண்டிருப்பது நம் காதில் விழத்தான் செய்கிறது!

‘‘சின்னமாமி......’’— என்று ஆரம்பிக்கும் பாடலை இவரே இயற்றி, அதற்கேற்ப இசையையும் இவரே அமைத்து, புதிய பாணியில் பாடிப், பலரது நெஞ்சங்களையும் இனிக்கவைக்கும் ஒரு தனி ஆற்றல் இவரிடம் உண்டு என்பதை நாம் மறுக்க முடியாது!

இந்தியாவின் உத்தர பிரதேச ராஜ்யத்திலுள்ள அலஹபாத்தில் இருக்கும் விவசாய ஆராய்ச்சி நிலையத்தில், விவசாயப் பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருக்கும் நித்தி என்ற கனகரத்தினம் நித்தியானந்தராஜாவைச் சென்றவாரத்தில் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன்.

மூன்றோ நான்கு தினங்களுக்குமுன்னர்தான் விடுமுறையில் அவர் இங்கு வந்திருந்தார்.

வேம்படி மகளிர் கல்லூரியில் நித்தி அப்போது படித்துக் கொண்டிருந்த போது வயது ஆறோ ஏழு தான் இருக்கும். பாடுவதிலும் ஆடுவதிலும் அந்த சின்னவயதிலேயே நித்திக்கு அலாதிப் பிரியம். பெரியவரையும் சின்னவரையும் கவர்ந்து விடுவார். பின்னர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் சேர்ந்து படித்தார். அங்கு அவர் இசைத்தாகத்துக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. ‘மவுத் ஓர்கனை’ வாயில் வைத்துக் கொண்டு கீதம் இசைத்த படிதான் நித்தியைக் காணலாம். யாருடைய உதவியுமின்றி ‘மவுத் ஓர்கன்’ ‘கிற்ரு’ ஆகியவற்றை வாசிக்கப் பழகிக் கொண்டார். இவரும் மற்றிருவரும் சேர்ந்து ‘எவர் ஹிறீன்ஸ்’ என்ற இசைக்குழுவை ஆரம்பித்து ‘புதுமை’ சங்கீதம் செய்தனர். ‘டிரம்’ வாசிக்கவும் பழகினர்.

ஆங்கிலப் பாட்டுக்கள் பாடுவதுதான் அப்போது நித்திக்குப் பிடிக்கும் ‘பைலா’வும் ஆடுவார்.

இரண்டாண்டுகளுக்கு முன்னர், யாழ். மாநகர சபையினரின் 3ம் ஆண்டு பௌர்ணமி கலை நிகழ்ச்சிகளின்போதுதான், நித்தியின் திறமை பலருக்கும் வெளியாகத் தெரிய வந்தது!

கடந்த வாரம் யாழ்.நகரில் நடந்த பௌர்ணமி நிகழ்ச்சியில் இவர்40 நிமிடம் இசைத்த பாட்டுகள் கூடியிருந்த பன்னூற்றுக் கணக்கான ரசிகர்களின் இதயங்களைத் தொட்டு விட்டதென்றே சொல்லலாம். அடிக்கடி அப்பளாஸ் பெற இவர் தவறவில்லை.

‘கள்ளுக்கொட்டில் பக்கம் போகாதே’ என்றும், ‘மினிஸ்கேர்ட்’டின் மகத்துவத்தையும் இவர் பாட்டில் இசைத்துப் பலரையும் கவர்ந்து விட்டார்.

‘பால்ரூம் டான்ஸ்’ தவிர்ந்த மற்றைய ஆங்கில நடனங்கள் எல்லாம் இவருக்குக் கைவந்தகலை. யாழ்ப்பாண மாநகரசபை ஊழியராகவிருக்கும் தர்மரத்தினம்தான் என் வளர்ச்சிக்கு முக்கிய காரணம் என்று இவர் சொல்லிக் கொள்கிறார். நித்திக்கு இப்போது வயது இருபத்தினாலுதான்.

இசையில் புதுமையும், புரட்சியும் செய்யவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கும் நித்தி ஓரளவு செயலிலும் காட்டி வருகிறார்.

—பாமா

## அசலும் நகலும்

தமிழ் நாட்டு நடிக நடிகையரைப் போல் உங்களில் எத்தனையோபேர் ருப்பீர்கள்!

அவர்களைப் போன்றமுகவெட்டும் நடிப்பாற்றலும் கொண்டவர்களைத்தான் இங்கு குறிப்பிடுகிறேன்.

ஆனாலும் இதுவரைகாலமும் வெளியே தெரியாமல் இலைமறைகாயாக இருந்துவிட்டீர்கள்! இனியும் உங்களுக்கு அந்தக்கவலை வேண்டாம்! நாமும் அந்தக் கவலையைஉங்களுக்குவைக்கமாட்டோம்!

இதுவரை நீங்கள் ஒரு நாடகத்திலும் நடிக்காவிட்டாலும் பரவாயில்லை. உங்களிடம் நடிக்கும் ஆற்றல் இருக்கிறது. நீங்கள் உணர்ந்துகொண்டால்போதும். அத்துடன் ஒரு சினிமா நடிகரையோ நடிகையையோ ஒத்த முகவெட்டு இருக்கவேண்டும்.

நீங்கள்எமக்கு அனுப்பிவைக்கவேண்டியவை:

உங்கள் படத்துடன் யாரைப்போன்றிருக்கிறீர்கள், நீங்கள் நடித்த நாடகங்கள், வயது போன்ற தகவல்களையும் சேர்த்து ‘அசலும் நகலும்’, ‘கலையரங்கம்’ மே/பா, ‘ஈழநாடு’,த.பெ. இல: 49, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல நாளகவோடு . . .

சந்தனம்

—வே. குமாரசாமி—

# கடைக்கா? சற்று நில்லுங்கள்!



மனிதராய்ப் பிறந்தோர்க்கு அகிலமெல்லாம் கட்டியாளினும் ஆசையடங்காது. அதுவும் பெண்ணாகப் பிறந்தவர்களுக்கு ஒரு புடவைக் கடையைத்தான் விலைக்கு வாங்கினாலும் அவர்களின் உடைப் பைத்தியம் நீங்காது, இது அவர்களின் இயல்பான சுபாவம். எப்படித்தானிருந்தாலும் ஒரு வரையறையின்றி, முன்னாலோசனையில்லாது உடைகள் வாங்குவதற்கு முன்னர் நீங்களும் கவனிக்கவேண்டிய சில முக்கிய அம்சங்கள் உள:-

■ உடை வாங்குவதற்கு முன் பழைய உடைகளைப் பார்வையிட்டு உடை அவசியம் தேவையாக இருக்கிறதாவெனச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

■ வாங்கப்போகும் சீலையின் விலையை நன்கு அறிந்திருத்தல்வேண்டும். சொற்ப பணத்தை வைத்துக்கொண்டு விலையுயர்ந்த துணிகளுக்கு ஆசைப்படக்கூடாது.

■ தெரிந்தெடுக்கும் துணிகள் அதிக நாட்களுக்குப் பாவிக்கக்கூடியதாகவிருக்க வேண்டும்.

■ வாங்கப்படும் துணி தைக்கும்பற்றனுக்கு ஏற்றதாக அமையுமா என்பதைக் கவனிக்கவேண்ரும். பருத்தித் துணியில் தைக்கத்தக்க ஒரு 'டிசைனை' மனதில் வைத்துக்கொண்டு பட்டுத் துணியை வாங்கக்கூடாது.

இவ்வாறு வாங்கினால் அது அச்சட்டை மோஸ்தரின் அழகையே கெடுத்துவிடும்.

■ தொழில் புரிவோர் சூழ்நிலையைப் பொறுத்து அதிகமான உடைகளை வாங்கலாம்.

■ குடும்பத்தில் ஒரே ஒரு பிள்ளையாகவிருந்தால் சிறு பிள்ளையாகவிருக்கும்போதே அப்பிள்ளைக்கு அதிகம் உயர்ந்த சாதித் துணிகளை வாங்குவது நல்லதல்ல. பிள்ளைகள் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்துகொண்டே போவார்கள். எனவே அந்த உடுப்பை அதிக நாட்களுக்குப் பயன்படுத்த முடியாது. அதிக குழந்தைகள் இருந்தால் அவ்வுடுப்புகளை ஒருவர்மாறி ஒருவர் பாவிக்கலாம்.

இவைகள் மட்டுமன்றி உடையின் நிறமும் பிரதானமாகக் கவனிக்கவேண்டியதொரு அம்சமாகும்.

■ சுவாத்தியத்துக்கேற்றதாக இருக்கவேண்டும்.

■ அணிபவரின் நிறத்துக்குப் பொருந்தக்கூடியதாக இருக்கவேண்டும். அவரவர்களின் உடல் நிறத்துக்கும் உடலமைப்புக்கும் பொருந்தாது உடையமைந்தால் அந்த உடை எவ்வளவு விலை மதிப்புடையதாக விருப்பினும் சோபிக்காது.

■ உஷ்ணமான காலங்களில் பருத்தியுடையும், மாரிகாலங்களில் கம்பளி உடையும் நல்லது. குழந்தைகளின் உடைகள் மெல்லிய நிறத் துணிகளால் ஆனவையாயிருத்தல் நல்லது.

## மூளை வளர வழி

மூளை வளர்ச்சியடைய உதவுவது வெண்டைக்காய். படிக்கும் மாணவர்க்கு மூளை களைப்படையாதிருக்க வெண்டைக்காய் சூப்புக் கொடுக்கலாம். பச்சை வெண்டைக்காயை அதிகாலையிலும், படுக்கு முன்னும் உண்பது மாணவர்க்கு நல்லது. ஒன்றிரண்டு உண்டாலே போதும்! மாணவர் வாரம் ஒருமுறை வெண்டைக்காய் உண்ண வேண்டும். வெண்டைக்காயை நன்றாக அவித்தல் கூடாது. அரை அவியலில் சாப்பிடுவதே நல்லது. வெண்டை விதை முருங்கைப்பூ இவற்றைப் பால்ல் கலந்து உண்டால் இளமை நீடிக்கும்.




தயாரிப்பு
**குணம்**

சமைக்க வாரீர்!

## 'நைலோன் கேக்'

### தேவையான பொருட்கள்:

ரின் பால் - 1
பட்டர் - 4 அவுன்ஸ்
கோதுமைமா - 8 அவுன்ஸ்
கலர், வனிலா - 1 தே. கரண்டி
பேக்கிங் பவுடர்-1 தே. கரண்டி
அப்பச் சோடா 1/2 தே. கரண்டி
முந்திரிகை வற்றல்
கஸ்கொட்டை
பேரீச்சம்பழம் எல்லாம் சேர்த்து 12 அவுன்ஸ்.

### செய்கை முறை:

மாவை பேக்கிங்பவுடர், அப்பச்சோடா ஆகியவற்றோடு கலந்து காற்றுப்படக் கூடியதாக நாலு அல்லது ஐந்து தடவை அரிக்கவும். 2 அவுன்ஸ் மாவைத் தனியாக எடுத்து அதில் மேற்கூறிய பழங்களைப் போட்டு கலந்துவைக்கவும். ரின்பாலை நன்றாக ஒரு பாத்திரத்தில் ஊற்றி அடித்துப் பின்னர் அதனுடன் பட்டரையும் சேர்த்து நன்றாகக் கரண்டியினால் அடிக்கவும் நன்றாக அடித்தவுடன் மாவையும் சிறிது சிறிதாகப் போட்டுக் கலக்கவும். கலந்த மாவுக்குள் பழவற்றல்களையும், கலர், வனிலா ஆகியவற்றையும் போட்டுச் சேர்க்கவும். நன்றாகக் கலந்த பின்னர் இக்கலவையை 'கேக்' தட்டில் ஊற்றி 'பேக்' பண்ணவும். இந்த கேக்கை அழகுபடுத்த விரும்பினால் ஆறிய பின்னர் மா சீனி, கலர், பட்டர் ஆகியன வற்றாலான சேர்வை கொண்டு அதன்மேல் பல அழகான சித்திரவேலைப்பாடுகளைச் செய்யலாம்.

# நல்ல நூல்களோடு.. தொடர்பு கொள்ளுங்கள்

நம் வாழ்க்கையில் பிடிப்பையும் ஒரு நெறியையும் உண்டாக்க ஊன்றுகோலாக விளங்குவது சிறந்த நூல்களாகும். அதிகமான நூல்களை நாம் படிக்கும்போது மணற்கேணியில் நீர் ஊறுவதுபோல அறிவு ஊறத் தொடங்குகிறது. வைரம் பட்டை தீட்டத் தீட்டத்தான் ஜொலிக்கிறது. இதைப் போன்று நம் அறிவுக்கு விருந்தாக மேன் மேலும் நூல்களைப் படிக்கும்போது நம் அறிவு தெளிவென்னும் ஜொலிப்பைப் பெறுகிறது. தெளிவு அறியாமையை அகற்றக்கூடிய வல்லமையைப் பெறுவதினால் நாம் முன்னேறக் கூடிய திறமையைப் பெறுகிறோம்.

வெறும் சினிமாப் புத்தகங்களையும் கீழ்த்தரமான எண்ணங்களை ஏற்படுத்தக் கூடிய புத்தகங்களையும் படித்தால் ஒருபோதும் நம் அறிவு தெளிவைப் பெறாது. இவற்றிற்கு மாறாக வாழ்க்கைக்குகந்த நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்கவேண்டும்.

நல்ல நூல்களின் மலிவுப் பதிப்புகள் இன்று எமக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ளன. வீண் ஆடம்பரங்களுக்குச் செலவு செய்யும் பணத்தில் சிறிது மீதப்படுத்தினால் இப் புத்தகங்களைச் சொந்தத்திலேயே நாம் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு சிறிய நூல்நிலையம் இருக்கவேண்டியது அவசியம். இவை உருவாக்க வேண்டியது ஒரு குடும்பப் பெண்ணே. எல்லாப் பெண்களும் நினைத்தவுடன் நூல் நிலையங்களுக்குச் செல்ல வசதியேற்படாது. ஆதலால் சிறந்த நூல்களை வாங்கி வீடுகளில் சேகரித்து வைத்துவிட்டால் ஓய்வு நேரத்தில் அவைகளை எடுத்து வாசித்துப் பயன்பெறலாம்.

எக்காலத்துக்கும் பொருந்துவனவான கருத்துக்களைத் தம்மகத்தே கொண்டு பிற்கால நாவல், சிறுகதை உருவகக்கதை போன்ற பல இலக்கியங்கள் தோன்றுவதற்கு வழிவகுத்த அழியா இலக்கியங்களான திருக்குறள், பாரதம், இராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற பழந்தமிழ் இலக்கியங்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவைகளாகும். இவைகளிலுள்ள சிறந்த கருத்துக்களினாலன்றோ நம் முன்னோர் இவை தோன்றிய காலம் தொட்டு இவைகளைக் கோவில்களிலும் பொதுக் கூட்டங்களிலும் எடுத்து விளக்கிக் கூறி அறிவுரை பகன்றுள்ளார்கள். இன்றும் இவைகள் இவ்வாறே போற்றப்பட்டு வருகின்றன. இவ்வறிவுக் களஞ்சியங்களை நீங்கள் உங்கள் ஓய்வுநேரத்தில் புரட்டிப் பார்த்தீர்களானால் நாம் வாழும் காலத்திற்கேற்ற புதுப்புதுக் கருத்துக்களைக் காணலாம்.

இப்பழம்பெரும் இலக்கியங்களைவிட பிற்காலத்தில் எழுந்த பாரதியாரின் நூல்கள், டாக்டர் வரதராசனின் நூல்கள் போன்ற பலவும் குடும்பவாழ்க்கை சிறப்பாகவும் அமைதியாகவும் அமைய உதவுவன.

நல்ல நூல்களோடு தொடர்பு கொள்வோமானால் நம் வாழ்க்கைக்கு ஏற்ற கொள்கைகளையும் குறிக்கோள்களையும் நாமே ஏற்படுத்திக் கொள்ள வழியமையும். ஆகவே பெண்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குக் கிடைக்கும் ஓய்வுநேரத்தில் நல்ல நூல்களோடு தொடர்பு கொண்டு தம் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

## மஞ்சள் மகிமை

மஞ்சள் தோல் நோய்க்கு எதிரி. நம் பண்டைய கால ஸ்நோ, பவுடர் யாவும் அதுதான். பேரழகிகள் அன்று பயன்படுத்தியது மஞ்சள்தான். மஞ்சள் அழகு தனி அழகு. முகத்தைப் பளிச்சிடச் செய்யும். வயிற்றுப் புண் ஆற்றும். வயிற்று நோவைக் குணமாக்கும். உள்ளியும் மஞ்சளும் அரைத்து மண்ணெயில் குழைத்துக்கட்ட நாள் பட்ட புண்கள் ஆறும்.

## நானும் எழுத்தும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கின. அப்படியே தமிழில் அந்த ஆங்கிலக்கட்டுரையை மொழிபெயர்த்துவிட்டுப் படித்துப்பார்த்தேன். மொழிபெயர்ப்புக் கட்டுரை என்று யாராவதுசொன்னாலும் நம்பமாட்டார்கள். அவ்வளவு கச்சிதமாக இருந்தது என் மொழிபெயர்ப்பு. என் பெயரையும்போட்டு, என் அபிமானப் பத்திரிகையான ''ஆலாவர்ணத்''துக்கு அனுப்பிவிட்டு, அந்த ஆங்கிலப்பத்திரிகையில்இன்னும் ஏதாவது கட்டுரையைச் சுவீகாரம் எடுப்போம் என்ற எண்ணத்தில் மீண்டும் அந்தப்பத்திரிகையில்கண்ணோட்டம்விட்டேன்.

நான் முன்பு சுவீகாரம் எடுத்த அந்தக் கட்டுரையின் கீழ் ஒரு குறிப்பு இருந்ததை அப்பொழுதுதான் கவனித்தேன். அந்தக் குறிப்பு வருமாறு:-

''சிறுகதை என்றால் என்ன?'' என்னும் இக்கட்டுரையை ''ஆலாவர்ணம்'' என்னும் தமிழ்ப் பத்திரிகையில் இருந்து மொழிபெயர்த்துத்தருகிறோம் ஆசிரியர்''

அட ஆண்டவனே! அந்தக் கட்டுரையை அதே பத்திரிகைக்குத்தானே நான் மீண்டும் அனுப்பிவிட்டேன்!

(யாவும் கற்பனை)

## சந்தனம்

—வே. குமாரசாமி—

காட்டு மரங்கள் இடையிலே
    கமகமக்கும் சந்தனம்
நாட்டு மக்கள் யாவரும்
    நாடி அதனை வாங்குவார்
மாதர் அழகு நெற்றியில்
    மடத்துச் சாமி வயிற்றிலே
வீதிச் சாத்திரி தோளினில்
    விளங்கும் வாசச் சந்தனம்
கோயிற் பூசை வேளையில்
    குளிர இறைவன் மீதிலே
தூய நல்ல மணத்துடன்
    துலங்கும் மஞ்சள் சந்தனம்
அரைந்து, கரைந்து தேயினும்
    அறிஞர் போலக் குணமதில்
நிறைந்த நறிய மணத்தினை
    நெடுக நெடுகத் தந்திடும்
சந்தனத்தைப் போலவே
    தரணி மீது நாமெலாம்
எந்த நிலைக்கு மாறினும்
    எவர்க்கும் நன்மை செய்வமே.


மங்கையர் அங்கங்களுக்கு அதீத அழகைக் கொடுப்பது
நவ நாகரிக அமைப்பு வாய்ந்தது.
உத்தரவாதமுள்ளது
தெய்வா நகை மாளிகையின்
தங்க வைர நகைகள்.
இன்றே விஜயஞ்செய்யுங்கள்
தெய்வா நகை மாளிகை
(முட்டாஸ்கடைச் சந்திக்கு அருகாமை)
173, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.



''லேடன்'' LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.
போன்: 330


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஈழநாடு
## பொது அறிவுப் போட்டி-7

சென்ற வாரத்துக் கேள்விகளுக்குச் சரியான விடைகள் பின்வருமாறு:- 1. ஐ. நா. சபை 1945-ம் ஆண்டு ஒக்டோபர் 24 ம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. 2. அல்பிரெட் நோபல். 3. ஜாபீர் ஏ. காதர். 4. மெக்ஸிக்கோ. 5. ஏழு பேர். 6. மெஸொபொத்தேமியா. 7. உண்மையறிவின்பம். 8 ஏமாற்றுதல். 9. ஜபல்பூர். 10. இறையாத கிணறு நாறும்.

### பரிசு பெறுபவர்

ஒரே ஒரு நேயர் மற்ற எல்லோரையும் தோற்கடித்து முதலாவது பரிசான பத்து ரூபாயைத் தட்டிக்கொண்டுபோய்விட்டார். அவருக்கு எமது வாழ்த்துக்கள். முற்றிலும் சரியான விடை எழுதியவர்:

செ. சூசையா, 26, தண்ணீர்த்தாங்கி வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

இரண்டாவது பரிசுக்குரியதாக எவரும் விடை அனுப்பவில்லையாதலால் ஐந்து ரூபாப் பரிசு எவருக்கும் வழங்குவதில்லையென போட்டிக் குழு தீர்மானித்தது.

### இந்த வாரக் கேள்விகள்

1. எக்ஸ்றே கதிர்களைக் கண்டுபிடித்தவர் யார்? 2. தமிழக முதல் அமைச்சருக்கு இப்பொழுது வயது என்ன? 3. ஆகாயத்தில் பறக்க முடியாத மூன்று பறவைகள் எவை? 4. எகிப்து, எதியோபியா, இத்தாலி. நைஜீரியா. கானு இவ்வரிசையில் சேராதது எது? 5. தீவுகள் தவிர, யாழ்ப்பாண குடாநாட்டின் விஸ்தீரணம் என்ன? 6. புருக்கள் மூலம் செய்தி அனுப்பும் முறையை முதலில் கையாண்ட நாட்டவர் யார்? 7. 'மாது சொன்ன சூழாய் இளமை துறக்க வல்லேன் அல்லன்' என்று பாடியவர் யார்? 8. இலங்கை இராணுவ தளபதி யார்? 9. இந்தியாவில் எந்த மாகாணத்தில் தனி ராஜ்யம் கோரி குழப்பம் நடக்கிறது? 10. இந்தோனேஷிய அதிபரின் பெயர் என்ன?

### விகட கவிதைப் போட்டி—(7)

வழ வழா என்று பேசிப் 'போர்' அடிப்பவரைப் பற்றி நேயர்கள் எழுதிய கவிதைகளில் பின்வரும் கவிதை சிறந்ததென்று தீர்மானிக்கப்பட்டது. இதற்குரிய பரிசு ரூபாய் பத்து. (சென்ற வாரம் ரூபாய் ஐந்து என்று போடப்பட்டது தவறு).

### பரிசுக் கவிதை

'அற்புத மானதோர் அசல் நகைச் சுவைமிகுந்ததே
சொற்பொழி வாற்றுவோர் சொகுசோடு—
கற்பனையுதிர
கத்திவிட்டுத்தான்சொன்னகதைக்குத்தானேசிரித்தல்
நித்தியம் போரடிப்போர் செயல்'

எழுதியவர்:- த. பரமலிங்கம், 10/2, அடைப்பன் வீதி, 2-வது லேன், யாழ்ப்பாணம்.

### பாரா டுக்குரியவை

பின்வரும் நேயர்களும் பாராட்டுக்குரிய கவிதைகளை புனைந்திருந்தார்கள்: அ. இரகுமதி, கோ. ஈஸ்வரன் பஸ் நிலையம், மன்னார். இ. விநாயகலிங்கம், ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

### அடுத்த போட்டி

எட்டாவது போட்டிக்கு கணவனை ஓயாமல் நச்சரித்து உபத்திரவம் கொடுக்கும் பெண்கள்மீது ஒரு கவிதை தீட்டுங்கள். பார்ப்போம் கவிதை நான்கு அல்லது ஐந்து வரிகளுக்கு மேற்படாமலிருப்பது விரும்பத்தக்கது.

# மனமொன்றிப் பிரார்த்தித்தால் இறைவன் எமைக் காப்பான்

## அபூதர்தாவின் வீட்டைத் தீ தீண்ட மறுத்ததன் இரகசியமும் இதுவே

— எம். எச். எம். அப்துற்றஸ்ஸாக் —
அதிபர், வண்ணை அரசினர் முஸ்லிம் வித்தியாலயம்

[இறைவனைத் தொழுவது மானக்கேடான செய்கைகளைத் தவிர்த்துவிடும் ]

மனம், வாக்கு, காயங்கள் ஒருமைப்பட்டுத் தனதிறைவனைத் தொழும் ஒரு நல்லடியான் மானக்கேடான செய்கைகளைக் கவனித்து அவைகளை நீக்கிவிட முற்படுவான். தனது அருமையான காலத்தை ஒதுக்கி வேறு உலகியற்கருமங்களைச் செய்யாது ஐங்காலமுந் தவறாது தொழும் ஒருவன் நன்மையை நாடியும், இறைவனது திருப்பொருத்தத்தை அடையவும் முயற்சிக்கின்றான். எனவே அவன் தனது சிந்தையைத் தீய கருமங்களைச் செய்யவிடாது தடுத்து நிறுத்தும் வல்லமையைப் படிப்படியாக அடைந்துவிடுகின்றான். அந்த நிலையை அடையும்போது அதனுள்ளே தீய செயல் புகுந்துவிட ஒருக்காலும் விரும்பமாட்டான். தினமும் நல்ல ஒழுங்கில் நடைபெறும் ஒரு திட்ட வேலையை ஒழுங்கற்ற திட்டங்கள் புகுந்துஅவனதுகிருத்தியங்களைக் குலைத்துவிட முடியாது என்பது பெரியோர்கள் கண்ட முடிபாகும்.

**சுவர்க்கத்தின் திறவு கோல்**

நமது முந்தையோர்களான பெரியவர்கள் ஐங்காலத் தொழுகையை ஒழுங்காக நிறைவேற்றியதனல் மனநிலையிலே ஒரு தனியிடத்தைப் பெற்றனர். பெருமானுல் (ஸல்) அவர்கள் தங்களது உணவைப் பரிசீலனை செய்யும் தன்மை பெற்றனர். காலை உணவை உண்ண முன்னர் அவ்வுணவு என்னவழியிலேகிடைத்தது ஆகுமான வழியிலா அன்றி அற்ற வழியிலா என்றறிந்து அற்ற வழியாயின் அதனை உண்ணுது உதறித் தள்ளிவிட்டனர். அது தனது ஆத்ம நிலைக்குப் பாதகமானது என்பதை உணரும் சக்திகளை அறிந்தனர். சில சந்தர்ப்பங்களிலே நுண்ணுணர்வை உபயோகித்து பட்டினியாகவே இருந்திருக்கின்றார்கள் இன்றைய நம்முடை

தான் இன்றைய முஸ்லிம்களின் வாழ்க்கையில் வீழ்ச்சி காணப்படுகின்றது. முஸ்லிம் இராச்சியங்களைப் பார்த்தாலும் அவைகள் பேரளவிலும், எண்ணிக்கையிலும் பெரிதாக இருக்கின்றன. எனினும் தோல்வியே அவர்களுடைய முடிவாக அமைகின்றன. ஆனுல் அதே பரம்பரையின் முன்னேடிகளான சகாப்பாக்களும் நாயகம் றசூல் (ஸல்) அவர்களும் எண்ணிக்கையிலே குறைவாகவும் வறுமையில் வாடியவர்களாகவும், வீடுவசதியற்றவர்களாகவும் இருந்தனரெனினும் மக்கா வாசிகளையும் தம்மை எதிர்த்த ஏனையோரையும் வெற்றிகொண்டனர். சுருங்கக்கூறின் பெரிய வல்லரசான உரோம சக்கராதிபத்தியமும் பாரசீகமும் ஏனைய தேசங்களும் பெருமானுரினதும் அவர்களது சகாப்பாக்களதும் காலடியில் வந்து சரண் அடைந்தன. இதன்காரணந்தான் யாது? இதில் ஒரு சிறந்த சக்தியைப் பெறக்கூடிய வேலைகள் திட்டமிட்டுச் செய்யப்பட்டன. எவ்வித கேள்விகளும், ஆராய்ச்சிகளும் செய்யப்படாததும் எவ்வித பயனையும் எதிர்கொள்ளாததுமான ஒருதியாகம் அது, இறைமறையின் கட்டளைக்குக் கீழ்ப்படிதல். அந்தக் கட்டளை இன்று நம்மத்தியில் பலவகை மொழியிற் காணக்கிடக்கின்றது. நாம் பின்பற்றத்தயாராக இல்லை. அதனுல் விரும்பாததோல்வி நம்மைதேடித் தேடிவந்து சேர்ந்துவிடுகின்றது. 'அல்லாஹ்'வை ஐங்காலமும் தொழுவதன்மூலம் இம்மையும் மறுமையும் கிடைக்கின்றன என்று இறைவன் கட்டளையிட்டான். இச்சுப செய்தியை வானவர் மூலம் பெற்றுக்கொண்ட பெருமானார், தங்கள் சகாக்களிடம் கூறினார்கள். உட

அதிக காலத்தைக் கழித்துவிடுவார்கள். காரணம் பள்ளி இறைவனின் இல்லம். அவனது வீட்டில் அருள் சொரிந்து கொண்டிருக்கும். அந்த அருளிலே தமக்கும் பங்கு கிடைத்துவிடும் என்ற நன்னம்பிக்கையே.] ஹஸரத் அபூதர்தா றழி) அவர்கள் வசித்துவந்த இடத்தில் இருந்த வீடுகள் சில தீப்பிடித்து எரியலாயின. இதைக்கண்ணுற்ற சில அன்பர்கள் மதீனுப்பள்ளிவாசலுக்குப்போய் அபூதர்தா (றழி அவர்களை நோக்கி, வீடுகள் எரிகின்றன; உங்களது வீடும் எரிந்துவிடக் கூடும். ஆகவே சீக்கிரமாகப் போய் வீட்டைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறினுர்கள். இதைக்கேள்வியுற்ற அபூதர்தா (றழி) அவர்கள் ''சரி சரி; நீங்கள் போய்வாருங்கள்; இப்போது இறைவனை மகிழ்வுடன் தொழும் நேரம். நான் இறைவனுடைய கட்டளையை நிறைவேற்றினுல் அவ்விறைவன் எனது வீட்டையும் என்னையும் பாதுகாப்பான். என்று கூறிவிட்டுப் பள்ளி வாசலிலே அமர்ந்து விட்டார்கள். முடிவென்னவாயிற்று. ஆச்சரியமான சக்தி தானே இறைவனுடையது.

அபூதர்தா (றழி) அவர்களுடைய வீட்டெல்லை வந்ததும் நெருப்பு அணைந்துவிட்டது. அபூதர்தாவுடைய வீட்டை நெருப்புத் தீண்ட மறுத்துவிட்டது ஏன்? அது அல்லாஹ்வின் கண்டிப்பான உத்தரவாகிவிட்டதேயன்றி வேறொன்றுமல்ல. இவ்வாறே ஒவ்வொரு நல்லடியார்களை எடுத்தாராயின், அவர்களுடைய தற்காப்புக் கேடயமாக அன்னவர்களுக்கமைந்தது உயிருள்ள தொழுகையொன்றே என்பதை உணரலாம்.

உத்தம சகாபாக்கள் தங்களது வாழ்க்கையிலே வெற்றி பெறுதற்கு ஓர் அரிய சாதனமாகத் தொழுகையை எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் தொழுகையில் ஈடுபட்டுவிடின் கற்களைப்போன்றும் மரக்கட்டைகள் போன்றும் அசையாது ஆடாது நின்றுவிடுவார்கள். அவர்களுடைய தேகம் நிறம் மாறிவிடும். எல்லா வீரங்களும் நீங்கி அடிமையைப்போல் அடங்கியொடுங்கிப் பிரார்த்தித்துக் கொண்டிருப்பார்கள். எனவேதான் அவர்கள் கையேந்திக் கேட்டவைகளை எல்லாம் அறிந்த அல்லாஹ் அவர்களுக்கீந்து கொண்டும் பாதுகாத்துக் கொண்டும் இருந்தான். இவ்வாறு நாமும் அனுஷ்டிக்கும்போது நமது அபிலாஷைகளும் வேண்டுதல்களும் நிறைவேறும் என்பதில் ஐயமின்று.

# மாவோ ஜுரம் என்னும் வெப்புக் காய்ச்சல்

## அலட்சியமாயிராதீர்: இதோ பரிகாரம்

— டாக்டர் எஸ். கந்தசாமி —

தற்போது இலங்கையிலுள்ள மக்களில் அதிகமானேரை ஒருவித வெப்புக் காய்ச்சல் பீடித்துள்ளது. மாவோசுரம் எனவும் இதனைக் கூறிக்கொள்கிருர்கள். எது எப்படியிருப்பினும் இந் நோயால் பீடிக்கப்பட்டவர்கள் குணமடைய வேண்டியதே எமது இலட்சியம்.

**நோய் பரவக் காரணம்**

இச் சுரம் வருவதற்குக் காரணம் என்ன என்பதை எமது பகுத்தறிவினுல் கண்டுபிடிப்பது முதற் கடமை. சென்ற வருட பருவமழை குறைந்ததினுல் நிலத்தில் தங்கிய வெப்ப




மானது, சிறுமழை பெய்ததினுல் வெளியில் பரவிக் காற்றுடன் சேர்ந்து மனித சரீரத்தில் கலந்துவிடுவதினுலும், தண்ணீரில் போதிய குளிரின்றி வெப்பமடைந்து அத்தண்ணீரையே உபயோகிப்பதினுலுமே இந்நோய் பரவ ஏதுவாகின்றது. இந்நோயினுல் பீடிக்கப்படுபவர்கள் அதிகமானேர் சிறுவர்களே. ஏனெனில் மென்மையான உடலமைப்பைப் பெற்றவர்களாதலினுல் மிக எளிதில் பீடிக்கப்படுகின்றுர்கள் என்பது அனுபவ வாயிலாக நாம் கண்டறிந்த உண்மை. இச்சுரம் ஆரம்பித்து எட்டு, ஒன்பது நாட்களுக்குள் சரீரத்தை மெலிவடையச் செய்துவிடும். இந்நோய் முற்றாகக் குணமடைந்த பின்பும் ஒருமாத காலம்வரை பலவீனமானவர்களாகவே காணப்படுகின்றுர்கள். இக்காலத்தில் ழந்தைகளை மிகவும் கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

**அலட்சியம் ஆகாது**

இச்சுரத்தைச் சாதாரண சுரமெனக் கருதி அலட்சியமாய் இருப்பது அறிவீனமாகும். நாள்சென்றுல் மார்புச்சளியுண்டாகி சுவாதமாகவும் மாறலாம் சிலவேளை குழந்தைகளுக்குக் கிரந்தி சுவாதமாகவும் சூக்கல் போன்ற கொடிய வியாதியாகமாறித் துன்பமடையவும் நேரிடும். ஆதலால் இவ்வியாதியை எளிதில் குணமாக்கக்கூடிய இரண்டு குடிநீர்வகைகளை இங்கு தருகிறேன். இவற்றை மருந்துக் கடைகளில் வாங்கிப் பக்குவம்செய்து பாவிக்கலாம். அலட்சியமாய் இருந்து நோய் முற்றியவர்ஃள் சிறந்த மருத்துவரிடம் சிகிச்சை பெறுவது நலந்தரும். பெரியவர்களுக்கு குடிநீர் பின்வருமாறு தயாரிக்கலாம்

நொச்சிவேர், தூதுவளைவேர், சிற்றுமட்டிவேர், ஆடாதோடைவேர், நிலவேம்பு, இருசீரகம், மல்லி, சுக்கு, வாய்விடங்கம், மிளகு திற்பலி, அதிமதுரம், ஓமம், வெந்தயம், வகைக்கு களஞ்சு இரண்டுவீதம் ஒருபடி நீர்விட்டு எட்டிலொன்றாக வற்றவைத்து, தேன்கூட்டி

(6-ம் பக்கம் பார்க்க)

## என் வாழ்வில் ஒரு நாள்—(14)

# ராஜாதி ராஜ மிருகேந்திரன்

நான் மிருகங்கள் எல்லாவற்றிற்கும் ராஜா என்பது உங்களுக்கு நன்றாக தெரிந்த விஷயம் தானே! காரணம் ஒரு ராஜனுக்கு வேண்டிய தைரியம், வலிமை, பெருந்தன்மை,

400 முதல் 500 ருத்தல் வரை இருக்கும். அவள் 300 ருத்தலுக்கு மேல் வளரமாட்டாள். இருப்பினும் வேட்டையாடுவதில் அவள் தான் சமர்த்து. எனக்கு வேட்டையாட தெரியாமலல்ல. அவள் அந்த வேலை

உண்போம். உண்பதற்கு நிறையக்கிடைத்துவிட்டால் எல்லோருக்கும ஒவ்வொரு பங்கு கிடைக்கும்.

ஆபத்தானவேளையில் மட்டும் ஆண்களாகிய நாங்களும் களத்தில் குதிப்போம். நான் தாவி ஓடப்பிடித்

### நாடக விமர்சனம்:

(4-ம்பக்கத்தொடர்ச்சி)

கடி அலறியது; காட்சிகளின் இடைவேளை; இவைகளில் கவனமே செலுத்தவில்லைப் போலும். நகைச்சுவை சேர்க்காததே நல்லதுதான்.

மொத்தத்தில் ரசிகர்கள் மனத்தில் நாடகத்தை நிலைபெறச் செய்துவிட்டார் தயாரிப்பாளர் ராமநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்த போட்டி

எட்டாவது போட்டிக்கு கணவனை ஓயாமல் நச்சரித்து உபத்திரவம் கொடுக்கும் பெண்கள்மீது ஒரு கவிதை தீட்டுங்கள், பார்ப்போம் கவிதை நான்கு அல்லது ஐந்து வரிகளுக்கு மேற்படாமலிருப்பது விரும்பத்தக்கது.

## நிபந்தனைகள்

ஒவ்வொரு போட்டிக்குரிய விடையும் அதற்குரிய கூப்பனுடன் இணைத்து அனுப்பப்படவேண்டும். விடைகள் 11-6-69க்கு முன்பொது அறிவுப் போட்டி (7), 'ஈழநாடு', த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு வந்து சேரவேண்டும். ஒருவர் எத்தனை விடைகளையும் ஒரே உறையில் போட்டு அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றுடனும் கூப்பன் இருக்கவேண்டும். போட்டிக்குழுவின் தீர்ப்பே முடிவானது.

கூப்பன்

**'ஈழநாடு' விகடகவிதைப் போட்டி-(7)**

பெயர்..........................................

விலாசம்..........................................

..........................................

திகதி ........................

கூப்பன்

**'ஈழநாடு' பொது அறிவுப்போட்டி-(7)**

பெயர்..........................................

விலாசம்..........................................

..........................................

திகதி..................

நிலைக்குப் பாதகமானது என்பதை உணரும் சக்திகளை அறிந்தனர். சில சந்தர்ப்பங்களிலே நுண்ணுணர்வை உபயோகித்து பட்டினியாகவே இருந்திருக்கின்றார்கள் இன்றைய நம்முடைய நிலையைச் சிறிது சிந்தனை செய்துபார்த்தால் உணவை எத்தனை தீய வழிகளிலே தேடி உடலை வளர்த்துவிக்கிறோம் என்பதை அறிந்து கொள்வோம். நியாயமற்ற வழியில் பொருள் ஈட்டுகிறோம் கொள்ளை, களவு முதலிய வகைகளைக் கையாண்டு பணம் சம்பாதித்து அவற்றின் மூலம் நமது நாளாந்த வாழ்க்கையை நடத்திவருகின்றோம். அதனாலே அது தக்கமுறையிலே இறையச்சமின்றி வாழாது மன இச்சைப்படி வாழத்தலைப் படுகின்றது. எனவே எண்ணம் அழுக்கடைந்து இதயமே இருளடைந்துவிடும். ஓர் அழுக்கான கண்ணாடியின் முன்னர் நமது முகம் தெளிவாகக் காட்சியளிக்க முடியாது. கண்ணாடியின் அழுக்கை நீக்கிவிட்ட பின்னர் முகத்தைப் பார்க்கின் உண்மை வடிவு காணமுடியும். இதேவாறு அகத்தூய்மை பெறின் நமது வாழ்க்கைமுறை தூய்மை பெறும். கரும்புள்ளிகளைப் போன்ற தீய செயல்கள் நம் வாழ்க்கையிலே புகும்போது நம் முன்னோர் அதை அறிந்து விலக்கிவிடத்துணிந்தார்கள். எம்மைப் போன்றவர்கள் இந்த விஷயத்தின் முக்கிய இறைச்சிப் பொருளைப்பற்றிச் சிந்தனை செய்வதே இல்லை. அதைப்பற்றிய அறிவும் இல்லை. ஆகவே

இம்மையும் மறுமையும் கிடைக்கின்றன என்று இறைவன் கட்டளையிட்டான். இச்சுப செய்தியை வானவர் மூலம் பெற்றுக்கொண்ட பெருமானார், தங்கள் சகாக்களிடம் கூறினார்கள். உடனடியாக அதை நம்பினார்கள்; அமுல்நடத்தினார்கள். ஐங்காலத் தொழுகையை நடத்துவதற்கு எது தடை செய்தாலும் அத்தடையைக் களைந்து விட்டுத் தொழுது கொள்வார்கள்.

### ஹஸறத் அபூதர்தா (றழி)

ஒருமுறை ஒரு சஹாபி தொழுகைக்கு ஆயத்தமாகி நல்லமுறையில் வுழுவும் (சுத்தம்) செய்து அல்லாஹ்வின் முன்னிலையில் தன்னை அர்ப்பணித்து ஒருமைப்பட்டிருக்கின்றார். தனது குழந்தையைச் சுற்றி வளைத்துக் கொண்டது ஒரு பாம்பு. வீட்டில் உள்ளவர்கள் ஆரவாரித்துப் பாம்பைக் கொன்று குழந்தையைக் காப்பாற்றினர். சகாபி தொழுகையை முடித்துக் கொண்ட பின்னர், மெதுவாகத் தம் மனைவியை அழைத்து, ''வழமைக்கு மாறாக ஏதோ சப்தஞ் செய்தமாதிரியான ஓர் உணர்ச்சியேற்பட்டதே என்ன நடந்தது'' என வினவினர். அப்போது, அவரது மனைவி ''சுப்ஹானல்லாஹ், உங்களுக்கு விஷயந் தெரியாதா என்ன? உங்கள் அன்புக் குழந்தையை ஒரு நாகபாம்பு சுற்றிவளைத்துக் கொண்டது. சிறிதுதாமதித்தாற் பிள்ளை பாம்பினாற் கடிக்கப்பட்டு இறந்திருக்கும். நல்லவேளையாக நாங்கள் பாம்பைக் கொன்று குழந்தையைக் காப்பாற்றினோம்'' என்று அழாதகுறையாகக் கூறினார். இதைக் கேட்ட அந்த அருமைக் குணம் படைத்த ஸஹாபி ''இது என்ன பிரமாதம்? நான் எனதிறைவனுடன் இணைந்து நின்றபோதேற்பட்ட மகிழ்ச்சியை விட்டுவிடமுடியுமா அப்படியாகக் கிடைக்கும் பேரானந்தத்தை நீங்கள் அனுபவித்தால் குழந்தை மட்டுமல்ல, நான் கூட இறந்திருந்தால் உங்களுக்குச் சஞ்சலமே ஏற்படாது. அது அவ்வளவு இனிமையும் இன்பமும் நிறைந்தது'' என விடை பகர்ந்து மேலும் இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள். மற்றொரு ஸஹாபியான அபூதர்தா (றழி) அவர்கள் பள்ளியிலே தொழுதுகொண்டிருந்தார்கள்.

[அக்கால முஸ்லிம்களுக்குத் தொழுகை என்றால் பெரிய மகிழ்ச்சி. குறித்த காலத்திற்கு முன்னதாகவே பள்ளியிலே காத்திருப்பார்கள். சிலர் பள்ளியிலே

## சொன்னது: சிங்கம்

## எழுதியது: வி. என். பி.

நான் மிருகங்கள் எல்லாவற்றிற்கும் ராஜா என்பது உங்களுக்கு நன்றாக தெரிந்த விஷயம் தானே! காரணம் ஒரு ராஜனுக்கு வேண்டிய தைரியம், வலிமை, பெருந்தன்மை, தோற்றம் யாவும் எனக்கிருக்கின்றன. நான் எந்தமிருகத்துக்கும்பயப்படுவதில்லை, பயப்படவேண்டிய அவசியமுமில்லை. உங்களைத்தவிர வேறு எந்தப் பிராணி என்னைத் தாக்கமுயலும், சொல்லுங்கள்! நீங்கள் மட்டுமென்ன? கையில் ஆயுதமின்றி வந்தால் உங்களையும் கணப்பொழுதில் யமலோகத்துக்கு அனுப்பிவிடுவேன். அதை அறிந்துதானே 300 யார் தூரத்திலிருந்துவெறும் கோழைத்தனமாக என்னைத்

400 முதல் 500 ருத்தல வரை இருக்கும். அவள் 300 ருத்தலுக்கு மேல்வளர மாட்டாள். இருப்பினும் வேட்டையாடுவதில் அவள் தான் சமர்த்து. எனக்கு வேட்டையாட தெரியாமலல்ல. அவள் அந்த வேலையைச் செய்யும்போது நமக்கென்ன கவலை. பேசாமல் நன்றாக தூங்குவேன். ஒரு நாளைக்கு 15, 16 மணித்தியாலம் தூங்குவேன். அவள் வேட்டையாடி முடிந்தவுடனேஎனக்கு அந்தஇரத்த வாடை மூக்கை துளைக்கும். உடனே நான் விரைந்து சென்று என் பங்கை வெட்கமில்லாமல் பறித்துக்கொள்ளவேன்.

புலியினங்கள்தனித்து அல்லது ஜோடியாக வாழ்ந்து திரியும். நாங்கள் யானை

துப்பாக்கியால் சுட்டு வீழ்த்துகிறீர்கள்.

சரி, அதை மறந்து விடுங்கள். எனது வாழ்க்கையைப் பற்றி சொல்ல வேண்டுமா? சொல்லுகிறேன்.

ஆதிகாலத்தில் நான் கிரேக்கநாட்டிலிருந்து இந்தியா வரையுள்ள மத்திய கிழக்கு நாடுகளிலும் ஆபிரிக்கா கண்டத்திலும் வசித்து வந்தேன். உங்கள் ராஜாக்களும் பிரபுக்களும் என்னைக் கொல்வதில் ஒரு தனி பிரமை கொண்டு என் குலத்தை கொஞ்சம் கொஞ்சமாக அளித்து நான் இப்பொழுது ஆபிரிக்காவிலும் இந்தியாவிலும் மட்டுமே வாழ்கிறேன்.

அதோ அந்தப் புல்வெளியில் நீட்டி நிமிர்ந்து படுத்து உறங்குகிறாளே, அவள்தான் என்னுடைய தற்காலிகமனையாள் நாங்கள் பல மனைவியரைக் கொள்வோம். எங்கள் பெண்களும் பல கணவரைக் கொள்வார்கள். வயிறார உண்டுவிட்டாள் குட்டிகளும் வளர்ந்துவிட்டன. ஆனபடியால்தான் ஆறுதலாக அயர்ந்துதூங்குகிறாள். பசி வயிற்றைகிண்ட ஆரம்பித்ததும் துயில் நீங்கி எழுந்து ஒரு பெரிய கர்ஜனை போட்டுவிட்டு வேட்டைக்கு கிளம்பிவிடுவாள். நானும் உடனே எழுந்து இடிமுழக்கம் போல நாலைந்துதடவை கர்ஜிப்பேன்.

அவளுக்கும் எனக்குமுள்ள வித்தியாசத்தைக் கவனித்தீர்களா? எனக்கு ஒரு தனி அழகுதரும் பிடரி மயிர் உண்டு. அவளுக்கு இல்லை. எனது நிறை சுமார்

களைப் போல, கிளைகளாக இருப்போம். ஒரு கிளையில் இருபது முதல் முப்பதுபேர், ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாக வாழ்வோம். பெண்கள் நாலைந்து பேர் சேர்ந்தே வேட்டைக்குப் போவார்கள். மான், மரை, வரிக்குதிரை, ஒட்டகச்சிவிங்கி இவற்றில் ஏதாவது கூட்டமாகமேய்வதைக் கண்டவுடனே அவர்கள் புல்லுக்குள் மறைந்து மறைந்து சென்று சூழ்ந்து கொள்வார்கள். சுமார் 30 அடிக்குள் நெருங்கியவுடனே ஒருத்தி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து கலைக்கத் தொடங்குவாள். மிருகங்கள் கிலி பிடித்து தாறுமாறாக ஓடும்போது மற்றவர்கள் இலகுவாக அடித்துப்பிடித்து கொன்றுவிடுவார்கள்.

என் மனையாள் வேட்டையாடுவது ஒரு தனி அழகு தான். ஒரு பாய்ச்சல், முன்னங்காலால் ஒரு அடி, கழுத்தில் ஒரு கடி, அவ்வளவு தான். மிருகம் புரண்டு விழுந்துவிடும். கொம்புள்ள மிருகமானால் அதன்கொம்புகளுக்கு அகப்படாமல் லாவகமாக பின்புறம் பாய்ந்து கழுத்தை அடித்து முறித்துவிடுவாள்.

ஆண்களாகிய நாங்கள் தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மிருகம் தரைக்குவிழுந்தவுடனே கம்பீரமாகச்சென்று விருந்தில் பங்குபற்றிக் கொள்வோம். உணவு குறைந்த நாட்களில் கணவன், மனைவி குட்டி, சகோதரம் என்று பார்க்காமல் ஒருவரோடொருவர் சண்டைபிடித்து

உண்போம். உண்பதற்கு நிறையக்கிடைத்துவிட்டால் எல்லோருக்கும ஒவ்வொரு பங்கு கிடைக்கும்.

ஆபத்தானவேளையில் மட்டும் ஆண்களாகிய நாங்களும் களத்தில் குதிப்போம். நான் தாவி ஓடப்பிடித்தேனேயானால் நூறு யார் தூரத்தை நாலே நாலு செகண்டில் கடந்துவிடுவேன். ஒரே பாய்ச்சலில் நாற்பது அடி பாய்வேன். சாதாரணமாக மற்ற மிருகங்கள் கண்டவுடனே பயந்து நடுங்கும்கொடியமுதலைகளையும் மலைப்பாம்புகளையும் கூச்சமில்லாமல்தாக்கிக் கொன்றுவிடுவேன். நீர்யானை என்று சொல்லப்படும் அந்தச் சதைக்குன்றையே தாக்குவேன் என்றால்பார்த்துக்கொள்ளுங்கள்

என் மனைவி கர்ப்பவதியாகி சுமார் 108 நாட்கள் கழிந்த பின்பு தண்ணீர் அருகிலுள்ள ஒரு புதருக்குள் மூன்றுமுதல் ஆறுகுட்டிகளை ஈன்றெடுப்பாள். அடுத்த மூன்று மாதங்களுக்கு அவள் அவற்றைவிட்டு பிரியமாட்டாள். குட்டிகளுக்கு பால் கொடுப்பதும்தனக்குபசித்த நேரம்இரைதேடுவதும்தான் அவளுடைய வேலை அவள் குட்டிகளுக்கு அருகில் இல்லாத சமயம்கிழச்சிங்கங்கள் பாட்டி வேலை செய்வதுமுண்டு. குட்டிகள் பால்குடி மறந்தவுடனே அடுத்த சுமார் ஆறுமாதங்களுக்கு அவள் அவற்றிற்குவேட்டை நுணுக்கங்களை பழக்குவாள். இரண்டு வருடங்கள் ஆனதும் குட்டிகள் இளஞ்சிங்கங்களாகி தங்கள்மாட்டுக்கு வேட்டையாடி இரைதேடப் புறப்பட்டுவிடும்.

உங்களைப் போல மனிதர் எங்களைக் கொல்லாவிட்டால் நாங்கள் சுமார் 15 வருடங்களுக்கு உயிர்வாழ்வோம். ஆனால் கூண்டுகளில் நீங்கள் பிடித்துவளர்ப்பவர்கள். நல்ல போஷாக்கு கிடைப்பதனாலும் காட்டில் அலைந்து திரிந்து வேட்டையாடவேண்டிய உபத்திரவம் இல்லாமையாலும், 30, 35 வருடங்களுக்கும் உயிரோடிருக்கிறார்களாம் உண்மை தானா?

கவனமே செலுத்தவில்லைப் போலும். நகைச்சுவை சேர்க்காததே நல்லதுதான்.

மொத்தத்தில் ரசிகர்கள் மனத்தில் நாடகத்தை நிலை பெறச் செய்துவிட்டார் தயாரிப்பாளர் ராமநாதன்.

—திரு.


## வரிவிளம்பரம்

### தேவை

அனுபவம் வாய்ந்த ரீ மேக்கர், சமையல்காரர், வெயிற்றர் உடன் தேவை. நேரில் விக்ரரி சைவ ஹோட்டல், கஸ்டம் றோட்டு, பருத்தித்துறை. 1188

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு வர்த்தக ஸ்தாபனத்திற்கு கணக்கு எழுதுவதிலும், ஆங்கிலத்தில் திறமையாக எழுதுவதிலும், தேர்ச்சி பெற்ற வாலிபர் தேவை. வயது: 20—25க்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. சகல தராதர நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். ம. நடராசா, 6, 2-ம் ஒழுங்கை, பிரவுண் றோட், யாழ்ப்பாணம். 1186

### காணவில்லை

பொதுநிறம், அணிந்திருந்த உடுப்பு வெள்ளை சாரம், வெள்ளைத்துண்டு, தட்டையானமுகம், தலைமுடி வெள்ளையுமாகிய மா. செல்லையா என்பவரை 4-6-69 ம் திகதி மாலை 5மணி தொடக்கம் காணவில்லை. காண்பவர்கள் செ. முத்துலிங்கம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற விலாசத்திற்கு அறிவிக்கவும். 1187

### விற்பனைக்கு

கார்

E N தொடரில் நல்ல நிலையிலுள்ள மொறிஸ் மைனரும் போட் பிறிபெக்ற் காரும் உடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு Dr. K. பாலசுப்பிரமணியம், 216, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். 1175



# தம்பி அன் கோ.,

வண்ணார்பண்ணை :-: யாழ்ப்பாணம்.

ரூ. 1000/- தொடக்கம் ரூ. 10000,- வரை

தவணை வைப்புக்கு (Call Deposits)
கீழ் குறித்த வட்டி கொடுக்கப்படும்.

7 நாள் அறிவித்தலில் எடுப்பதற்கு வருடம் 7 சத வீதம்

30 நாள் அறிவித்தலில் எடுப்பதற்கு வருடம் 9 சத வீதம்

வட்டி ஒவ்வொரு வருடமும் கொடுக்கப்படும்,



CSK

**சி. எஸ். கே. கந்தையா செட்டியார் ஸ்தாபனம்**

தயாரித்தளிக்கும்

**சி. எஸ். கே. தேங்காயெண்ணை, பிண்ணாக்கு, இந்திரை அரிசி ஆகியன**

என்றும் மக்களின் திருப்தியையும் ஆதரவையும் பெற்றவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வளர்ச்சிக்கு ஆசிரியர்கள் அளித்தநன்கொடை

## முருகமூர்த்தி வித்தியாசாலை அதிபர் பெருமிதம்

அராலி, வெள்ளி

அராலி தெற்கு முருகமூர்த்தி வித்தியாசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர் பாடசாலையின் வெள்ளி விழாவையும் கல்வி நூற்றாண்டுவிழாவையும் நேற்றிரவு வெகு சிறப்பாகக் கொண்டாடினர்.

வட்டுக்கோட்டை எம்.பி. திரு. அமிர்தலிங்கமும் பாரியாரும் பிரதம விருந்தினராக விழாவில் பங்குபற்றினர். விழா வட்டுக்கோட்டை வித்தியாதிகாரி திரு. பீ. எஸ். குமாரசாமியின் தலைமையில் நடைபெற்றது.

பாடசாலை தலைமை ஆசிரியர் திரு வி. நாகலிங்கம் தமது ஆண்டறிக்கையில் பாடசாலை சென்ற நூற்றாண்டு காலமாக இப்பகுதியில் மாணவருக்கு ஆரம்பக்கல்வி போதித்து வந்துள்ளதாகவும், 1944ம் ஆண்டு வரை அமெரிக்கன் மிஷனரிமாரின் மேற்பார்வையில் இயங்கியதென்றும், அதற்குப் பின்னர் பெற்றோரின் விருப்பப்படி சைவ வித்தியா விருத்திச் சங்கம் பாடசாலையைப் பொறுப்பேற்றதென்றும் 1958ல் இங்கு சிரேஷ்ட வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டதென்றும் அன்று தொடக்கம் கல்விப்பொதுத் தராதர வகுப்பில் (சாதாரணம்) போதிக்கப்பட்டுவருகிறதென்றும் கூறினார்.

சென்ற ஆண்டில் இப்பாடசாலையிலிருந்து கனிஷ்ட பொதுத் தராதர வகுப்புப் பரீட்சைக்கு 10 பேர் தோற்றினரென்றும், அவர்களில் 7 பேர் சித்தியடைந்தனரென்றும் மூவர் விசேஷ சித்திபெற்று பல்கலைக்கழக புகுமுக வகுப்புகளில் சேர்ந்துள்ளனரென்றும் கூறினார். பாடசாலையின் வளர்ச்சிக்கு பாடசாலை ஆசிரியர்கள் பெரிதும் உதவியளித்து வருவதாகவும் அப்பாடசாலை ஆசிரியருள் திருமதி பரமேஸ்வரி 1000 ரூபா கட்டட நன்கொடையாகவும். இன்னொரு ஆசிரியர் திரு. ஆ தருமரத்தினம் ஒரு பரப்பு நிலம் கட்டடமமைக்க நன்கொடையளித்துள்ளாரென்றும்மேலும்குறிப்பிட்டார். அத்தோடு வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், பன்னீராயிரம் ரூபா அரசாங்க நன்கொடைபெற்றும் பாடசாலையில் தொடர்ந்து சிரேஷ்ட வகுப்புக்கள் நடாத்த கல்வி அதிகாரியின் அனுமதி பெற்றுத் தந்துள்ளாரென்றும் கூறினார். விழாவில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உரைநிகழ்த்தி பாட்டொன்றும் பாடினார்.

பாடசாலை நடாத்திய தமிழ் விழாப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு திருமதி மங்கையர்க்கரசி பரிசில்கள் வழங்கினார்.

யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர்கள் திருவாளர்கள் ரி. விநாயகமூர்த்தியும், உ. ந. தேவகடாட்சமும் விழாவில் பங்குபற்றி உரைநிகழ்த்தினர் பாடசாலை மாணவர்களின் பேச்சு, நடனம், கும்மி, கோலாட்டம், பழையமாணவரின் சரித்திர சமூகநாடகங்களும் விழாவிலிடம் பெற்றன.


# வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி: 3 காட்சிகள், போயா, பிரீபோயா 4 காட்சிகள்.

நாகேஷ்—சுந்தரராஜன்

வசந்தா—மனோரமா

நடித்த

# ஆலயம்

மகத்தான 2-வது வாரம்




# சர்வ கட்சி மகாநாடும் வட்ட மேஜை மகாநாடும்

சர்வகட்சி மகாநாடு கூட்டுவதாலோ, வட்ட மேசை மகாநாடு கூட்டுவதாலோ பயன் கிடைக்குமா?

## சிங்களவர் - தமிழர் சகோதரத்துவ சங்கம்

மொழிப்பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வுகாணவேண்டுமானுல் சகல அரசியல் கட்சிகளும் கலந்துகொள்ளக் கூடிய ஒரு வட்ட மேசை மகாநாடு கூட்டப்பட வேண்டுமென்றும் இதில் ஒரு முடிவுசெய்துகொள்ளப் பட்டால் பின்னர் இந்த மொழிப் பிரச்னையை கட்சி அரசியலுக்காகவும் ஆட்சி அதிகாரப்போட்டிக்காகவும் யாரும் பயன்படுத்த முன் வரமாட்டார்களென்று 1956-ம் ஆண்டிலிருந்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறி வந்திருக்கிறார். அந்தச் சமயத்திலேயோ அல்லது அதற்குப்பின்னரோ அல்லது இன்றுகூட மொழிப்பிரச்னை உட்பட தேசியப் பிரச்னைகள் அனைத்துக்கும் ஒரு நல்ல தீர்வு காண வேண்டுமென்றும் நாட்டில் உண்மையான தேசிய ஐக்கியத்தை நிலைநாட்ட வேண்டுமென்றும் ஆட்சி பீடத்திலுள்ளவர்களுக்கும் ஆட்சிபீடத்துக்குவரும் வாய்ப்புள்ளவர்களுக்கும் அக்கறை இருக்குமானுல் வட்டமேசை மகாநாடு கூட்டப்பட்டிருக்கலாம் இதே சமயம் எதையும் சாதிக்கும் திறமை படைத்த திரு. ஜி. ஜி. பொன்னம்பலமே முயற்சி செய்து 1956-ம் வருடத்திலிருந்து 1969-ம் வருடம் வரையும்உள்ள இத்தனை ஆண்டுகளுக்குள் எப்படியோ எவரைக் கொண்டோ வட்ட மேஜை மகாநாட்டைக் கூட்டியிருக்கமுடியும். [illegible] மணிகட்டுவது [illegible] என்ற நிலையில் வட்ட மேஜை மகாநாடு என அடிக்கடிசொல்லிக்கொண்டிருப்ப

போதனுமொழிப்பிரச்னை, கல்வி வெள்ளையறிக்கையில் தலைதூக்கியபோது அரசாங்கக்கட்சியில் அங்கம் வகித்த இருபெரும் தமிழ்க்கட்சிகளும் ஒன்றுசேர்ந்து ஒரே குரலில் வாதாடியதால் கல்வி அமைச்சரும் விட்டுக் கொடுக்க நேர்ந்தது; அரசாங்கமும் பணியவேண்டியேற்பட்டது.

இதைத்தொடர்ந்து இரு பெரும் தமிழ்க்கட்சிகளும், தமிழ் மக்களைப்பாதிக்கின்ற எஞ்சியுள்ள உரிமைகளையும் பறித்துவிடக்கூடிய சட்டங்களையும் அராங்கத்தின் செயல்களையும் தடுத்து நிறுத்துவதற்குஒரு பொதுத் திட்டத்தை வகுத்துச்செயல்பட முன்வந்திருந்தால் ஓரளவாவது பயன்கிடைத்திருக்கும்.

வடபகுதியில் அரசாங்கம் பொறுப்பேற்றுள்ள மூன்று பௌத்த பாடசாலைகளின் போதனுமொழியை மாற்றுவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்ததைத் தொடர்ந்து, இந்த ஆபத்தைத்தடுப்பது பற்றியும் அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பதென்பதுபற்றியும் ஆராய்வதற்குசென்றமாதம் 31-ந் திகதிதமிழரசுக்கட்சிப் பொதுச்செயலாளரும் வட்டுக்கோட்டைப் பிரதிநிதியுமான திரு. அ. அமிர்தலிங்கம் ஒருமகாநாடுகூட்டினார். வடபகுதியைச்சேர்ந்த ஆட்சிமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் உள்ளூராட்சிமன்றத்தலைவர்கள், கல்விமான்கள் ஆகியவர்களுக்கு அவர்அழைப்பு அனுப்பியிருந்தார். எட்மண்ட் சமரக்கொடி தலைமையிலுள்ள புரட்சிவாத சமசமாஜக் கட்சியின்

அவர்களின் சம்மதத்தையும் பெற்றிருக்கலாம். வியட்நாம் பிரச்னைக்கு ஒரு தீர்வு காண்பதற்காக இப்பிரச்னையில் சம்பந்தப்பட்டவர்கள் பாரிசில் கூடிப்பேச எடுத்துக்கொண்ட முயற்சியில் முதல் மூன்று நான்கு மாதங்கள் மகாநாட்டு மேசை எப்படியிருக்கவேண்டும்; வட்டமாகவா, சதுரமாகவா, நீள்சதுரமாகவா, யார் யார் எங்கே இருப்பது போன்ற பிரச்னையிலேயே கழிந்ததென்பதை இங்கு குறிப்பிடுவது பொருந்தும்.

ஆனாலும் தமிழ்மக்களை எதிர்நோக்கியுள்ள பெரிய நெருக்கடியைத்தீர்ப்பதற்கு யார் மகாநாடு கூட்டினாலும் அதில் உண்மையான ஆர்வமும்அக்கறையுள்ளவர்களும் கலந்து கொண்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வருகிறது; பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பிருக்கிறது.

தமிழ்மக்கள் தங்கள் நிலையை உணர்ந்து தங்கள் குறைகளை நீக்க வழியென்ன என்பதை ஆராய்ந்து ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டால் பெரும்பான்மைக் கட்சிகளையும் சேர்த்து பிரதமரைக்கொண்டே ஒரு மகாநாட்டைக்கூட்டி தேசியப் பிரச்னைகளுக்குத் தேசிய ரீதியில் ஒரு தீர்வு காண்பதற்கு முயற்சி செய்வது கடினமாக இராது. தேசியப் பிரச்னைகளுக்குத் தேசியரீதியில் தீர்வுகாண சகலகட்சிகளையும் கொண்ட வட்ட மேஜை மகாநாடு கூட்டலாமென ஐக்கிய தேசியக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்ததாகவும் எனக்கு நினைவு.

தையும் அவநம்பிக்கையையும் நீக்கி, இருபெரும்சமூகங்களுக்கிடையிலும் ஐக்கியத்தையும் நிரந்தரமான அமைதியையும் நிலைநாட்ட சிங்கள-தமிழ் சகோதரத்துவ சங்கம் ஒன்றை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது இந்த உன்னத இலட்சியத்தையுடையவர்கள் அனைவரும் தங்கள கருத்தையும் ஆலோசனையையும் தெரிவித்து என்னுடன் தொடர்புகொள்ளுங்கள்'' என்று பந்துல ஸ்ரீ குணவர்த்தன என்பவர் எழுதியிருக்கிறார். அவருடன் தொடர்புகொள்ள விரும்பும் அன்பர்கள் '17, பிலி வீதி, திம்பிரி கசாய' என்ற விலாசத்துக்கு எழுதலாம்.

இலங்கை-இந்திய நட்புறவுச் சங்கம், இலங்கை-சீன நட்புறவுச்சங்கம், இலங்கை-சோவியத் நட்புறவுச் சங்கம் போன்ற பல சங்கங்கள் இருக்கின்றன. வெளிநாடுகளுடன் நட்புறவு கொள்வது நல்லதுதான். அதற்கு முன் உள்நாட்டில் வாழும் மக்கள் நட்புறவுடன் சகோதரர்களாக வழிகாணவேண்டியது மிகமிக அவசியமல்லவா? இந்த வகையில் பந்துல ஸ்ரீ குணவர்த்தனவின் முயற்சிக்குப்பலரும் ஆதரவு கொடுத்தால் நல்லதுதான். வாழ்க அவர் முயற்சி. அரசியல்வாதிகள்ஆதரவுகொடுப்பார்களென எதிர்பார்க்க முடியாது அதிலும் இது தேர்தல் காலமாயிற்றே.

—— ——

# பெண் கடத்தல் வழக்கில் எதிரிக்கு 6 மாத கடுழியம்

சாவகச்சேரி, சனி

15 வயதுப் பெண்ணைத் தந்தையின் பாதுகாப்பிலிருந்து கடத்தியவருக்கு ஆறு மாதக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கில் உருத்திரபுரத்தைச் சேர்ந்த சண்முகதேவர் மகள் லட்சுமியை 68-ம் ஆண்டு நவம்பர் 19-ம் திகதி இப்பெண்ணின் தந்தையின் பாதுகாப்பிலிருந்து கடத்தியதாக அதே ஊரைச்சேர்ந்த கோவிந்தன் ராமு என்பவர் மீது கிளிநொச்சிப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

லட்சுமி சாட்சியமளிக்கையில் எதிரிகறுப்பையா என்பவருடன் கள்ளுக்கொட்டிலை நோக்கிவந்ததாகவும் பின்னர் தன்னைக் காட்டுப்பாதையால் கடத்திச்சென்றதாகவும், பொலிசார் கேட்டால் 19 வயதெனக் கூறும்படி அவர் சொன்னதாகவும் கூறினார்.

விசாரணை நடுவில் எதிரி ராமு தான் லட்சுமியைக் கடத்திய குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதைத் தொடர்ந்து மாஜிஸ்திரேட் எதிரிக்கு 6 மாதக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தார்.

எதிரிக்காக புரக்டர் வி செல்லத்தம்பி ஆஜரானார். வழக்காளிதரப்பில் புறக்டர் எஸ். பி. மயில்வாகனம் ஆஜரானார்.

## மின்னொளி பெறும் மூதூர்

திருக்கோணமலை, வெள்ளி

மூதூர் வெகு விரைவில் மின்னொளி பெறுவதற்கான ஒழுங்குகள் யாவும் பூர்த்தியாகியுள்ளன 14ந் திகதி மூதூருக்கு விஜயம் செய்யவிருக்கும் உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா இந்த மின்சார விநியோகத்தை ஆரம்பித்துவைப்பாரெனத் தெரிய வருகிறது.


MANOHARA

JAFFNA

Daily 4-45, 7 & 9-45P.M.

Rod Steiger, Lee Remmick

in

NO WAY TO TREAT A LADY

(Tec ni Co'or)

Academy Award Winner


## மாவோ சுரம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு அவுன்ஸ் வீதம் தினமும் மூன்றுவேளை பருகி வரவேண்டும்.

சிறுவர்களுக்கு குடிநீர் தயாரிக்கும் விதம் வருமாறு சித்தரத்தை, மிளகு, இஞ்சி, [illegible] தில், கடுகு [illegible] ணைப்பு வகைக்குகளஞ்சு இரண்டு வீதம் எடுத்து முன்


# வெஸ்லி சினிமா

(மானிப்பாய்)

தினசரி6-30, இரவு10-00

பிரிபோயா, போயா 10-30மணி

எம். ஜி. ஆர். - சாவித்திரி


## இன்றுவரவேற்பு

உரும்பராய், சனி

அண்ணமலைப் பல்கலைக்கழக இசைத்துறைப் பகுதியின் முன்னாள் பேராசிரியரான சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணியபிள்ளைக்கு இன்று உரும்பராய்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மகத்தான 2-வது வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) விஜயா (மட்டுநகர்)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
காண்பிக்கப்படுகின்றது

(ஜேம்ஸ்பொன்ட்) (ஆடலழகி)

ஜெய்சங்கர் - ஜெயலலிதா
நாகேஷ் - மனோரமா - சோ
குமாரி சச்சு, சுந்தரராஜன்
நடித்து

வி. ஸ்ரீநிவாசனின் டைரக்ஷனில்
உருவாகி வெளிவந்துள்ள
மகோன்னத சித்திரம்

# பொம்மலாட்டம்

திரைக்கதை வசனம் சோ. இசையமைப்பு வி. குமார்



வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 10-30 மணி
எம். ஜி. ஆர். - சாவித்திரி
நடித்த
பரிசு



வல்வெட்டித்துறை
ரஞ்சனு தியேட்டர்
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடித்த
தங்கை



ராஜா 145வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்கு அரைக்கட்டணம்


...தயாரிக்கும் விதம் வருமாறு சித்தரத்தைத், மிளகு, இஞ்சி, கண்டதிற்பலி, சீந்தில், கடுகுரோகணி. இலுப்பைப்பூ வகைக்குகளஞ்சு இரண்டு வீதம் எடுத்து முன் போலவே குடிநீர் பக்குவம் செய்து தேன்கூட்டித் தினமும் மூன்றுவேளை கொடுக்க வேண்டும். நோய்க்கு ஏற்றவாறு நான்கு, ஐந்து வேளைகளும் பாவிக்கலாம். இயன்றவரை மிருதுவான உணவுவகைகளை உபயோகிப்பது நலம். சுரம் ஆறிவரும்போது உடலை வெந்நீரினால் கழுவிவரவேண்டும்.


REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Pre-Poya, Poya 4 Shows
HUGH O' BRAIN
in
Assassination in
Rome
(Cinemascope Color)



ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த
உயிரா மானமா


வட்ட மேஜை மகாநாட்டைக் கூட்டியிருக்கமுடியும். 'பூனைக்கு மணிகட்டுவது யார்?' என்ற நிலையில் வட்ட மேஜை மகாநாடு என அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பதால் வட்ட மேஜை மகாநாடு என்ற வார்த்தைக்கே மதிப்பில்லாத ஒருநிலையை வேறுசிலர் சந்தர்ப்பம் பார்த்து ஏற்படுத்திக்கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. 'ஒரே மொழி, ஒரே இனம் தான் எங்கள் கொள்கை' என்ற ரீதியில் பேசியும் செயலிலும் காட்ட முனைந்த திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகா சில வருடங்களுக்குமுன்னர் ஆட்சிமன்றத்தில் ஒரு கட்டத்தில் "ஒரே மொழி, ஒரே இனம்" என்றகருத்தில் பேசியபோது உங்களையும் சேர்த்து இப்பிரச்னைகளுக்குத் தீர்வுகாணவேண்டுமென்பதில் கூட இப்போது ஐயம்கொள்ளவேண்டியதாக இருக்கிறது என்ற கருத்தில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறியதாக எனக்கு ஞாபகம். ஆனலும் வட்டமேஜை மகாநாட்டின் மூலம் மொழி மற்றும் தேசியப்பிரச்னைகளுக்கு ஒருநல்ல தீர்வுகாண முடியுமென்ற நம்பிக்கையை திரு. ஜி. ஜி. இன்னும் இழக்கவில்லை. அது வீண்போகாதென்பதற்கான அறிகுறிகள் தென்படத்தொடங்கியிருக்கின்றன.

'வட்ட மேஜை' என்ருலென்ன சதுர மேசை என்ருலென்ன; யாருடன் கூடிப்பேசுவது, எதைப்பற்றிப் பேசுவது, ஒவ்வொரு போக்கையுடையவர்களுடன் மகாநாடு நடத்துவதினுல் என்ன பயன் கிடைக்கவிடப்போகிறது என்று தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பலரும் மற்றும் சிலரும் 'வட்டமேஜை மகாநாட்டு' யோசனையையே தட்டிக்கழித்து வந்தனர். தலைவர்கள் ஒற்றுமையென்ற பேச்சுக்கே அவசியமில்லையென்றும் மக்கள் ஒன்றுபட்டால் போதுமென்றும் அதாவது மக்கள் ஒரே கட்சியையே, ஒரே தலைமையையே அவர்கள் தெரிவுசெய்தால் அதுவே உண்மையான ஒற்றுமையாக இருக்குமென்றும் தமிழரசுக்கட்சியினர் தெரிவித்துவந்தனர். வடக்கு கிழக்கு மாகாண மக்களைப் பொறுத்தவரையில் இதுவரை இரண்டு தமிழ்க்கட்சிகளினதும் தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளினதும் சேவையும் ஆற்றலும் தேவையென்பதையே தெரிவித்துவந்துள்ளனர். சென்ற பத்து ஆண்டுகளுக்குமேலாக இலங்கை வாழ் தமிழ்மக்கள் பலவித கஷ்டநஷ்டங்களுக்குள்ளாகி படிப்படியாக சகல உரிமைகளையும் இழந்துவருகின்றனர்.

உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், கல்விமான்கள் ஆகியவர்களுக்கு அவர் அழைப்பு அனுப்பியிருந்தார். எட்மண்ட் சமரக்கொடி தலைமையிலுள்ள புரட்சிவாத சமசமாஜக் கட்சியின் யாழ்ப்பாணக்கிளையைச்சேர்ந்தவர் தவிர வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளோ தலைவர்களோ கலந்துகொள்ளவில்லை. ஏன்?

தமிழ்மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஒரு பெரிய கட்சி என்ற முறையில் பல கட்சிகளையும், நிறுவனங்களையும் அழைத்துப் பேசுவதற்குத் தமிழரசுக் கட்சிக்கு அருகதையுண்டுதானென்ருலும் பல்வேறுகட்சிகளையும் நிறுவனங்களையும் ஒரு பெரிய நெருக்கடி ஏற்படும் பொழுது கடைசி நேரத்தில்தானு இப்படியொரு மகாநாட்டைக் கூட்டவேண்டும்? சென்ற பொதுத்தேர்தல் முடிந்தவுடன் அல்லது அதற்கு முந்திய பொதுத்தேர்தல் முடிந்தவுடன் தமிழ்மக்களை எதிர்நோக்கியுள்ள கஷ்டங்களுக்கு விடிவுகாண சகலகட்சிகளையும் பொதுநிறுவனங்களையும், கல்விமான்களையும் அழைத்து ஆலோசனை செய்திருந்தால் எவ்வளவு நன்ருக இருந்திருக்கும்?

பல்வேறு கட்சிகளையும் வேறுபட்ட கருத்தை உடையவர்களையும் ஒரு மகாநாட்டுக்கு அழைப்பதற்குமுன் அவர்களுடைய ஆலோசனைகளையும் முதலில் கேட்டு

மேஜை மகாநாடு கூட்டலாமென ஐக்கிய தேசியக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்ததாகவும் எனக்கு நினைவு.

## தமிழ்-சிங்கள சகோதரத்துவ[illegible]

சிங்களக்கட்சிகளும் சிங்கள மக்களும் ஒன்றுபட வேண்டுமெனத் தென்னிலங்கையில் குரல் ஒலித்துக் கொண்டிருக்கிறது. தமிழ் மக்களும் தமிழ்க்கட்சிகளும் ஒன்றுபட வேண்டுமென்ற குரலும் ஒலித்துக்கொண்டிருக்கிறது. இதே சமயம் பௌத்தர்கள் ஒன்றுபட வேண்டுமென்றும் முஸ்லிம்கள் ஒன்றுபடவேண்டுமென்றும் சைவர்கள் ஒன்றுபட வேண்டுமென்றும் கிறிஸ்தவர்கள் ஒன்றுசேரவேண்டுமென்றும் குரல்கள் ஒலிக்காமலில்லை வர்க்கரீதியில் தொழிலாளர் அனைவரும் ஒன்றுசேர வேண்டுமென்ற குரலும் பல்வேறு மேடைகளிலிருந்தும் ஒலித்துக் கொண்டுதானிருக்கிறது.

இதே சமயம் ஒரு குரல் புதிதாக ஒலிக்க முன்வந்திருப்பது ஆச்சரியத்தைத்தருவதாயினும் மகிழ்ச்சியையும் எதிர்காலத்தைப் பற்றிய சிறிய நம்பிக்கையையும்தருவதாக இருக்கிறது.

''இலங்கையில் வாழும் இருபெரும் சமூகங்களான சிங்களவருக்கும் தமிழருக்குமிடையில் நிலவும் அச்சத்

அண்ணமலைப் பல்கலைக் கழக இசைத்துறைப் பகுதியின் முன்னுட் பேராசிரியரான சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணியபிள்ளைக்கு இன்று உரும்பராய் தங்கவேல் மாளிகையில் வரவேற்பு நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

இசைப்பேரறிஞர் சித்தூர் சுப்பிரமணியபிள்ளையின் மாணவரான சங்கீத பூஷணம் மட்டக்களப்பு என். இராசு உட்பட இரசிகர்கள் பலர் இந்த ஏற்பாடு செய்துள்ளனர். இவ்வரவேற்பில் சங்கீதாசிரியர்கள் உட்படப் பலர் கலந்துகொள்ளவிருக்கிருர்கள்.

## காணவில்லை

ஊர்காவற்றுறை சுருவிலைச் சார்ந்த தியாகராசா சிவசுந்தரன் என்ற சிறுவனை 4-5-69 புதன்கிழமை காலையிலிருந்து காணவில்லை. இச்சிறுவனைப் பற்றிய தகவல்களைத் தருபவர்களுக்கு ரூபா 100 - வெகுமதியாகக் கொடுக்கப்படும். சிறுவனின் தோற்றம் மெல்லிய தேகமும் பொதுநிறமும் உடையவன். அரைக்கால்சட்டையும் சேட்டும் அணிந்திருந்தவன். அறிவிக்கவேண்டிய விலாசம்: பொ. தியாகராசா, சுருவில், ஊர்காவற்றுறை. 1002


# யாழ். வின்ஸர் வெண்திரையில்

தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜி கணேசன்
★ பத்மினி
★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ்
★ எம். என். நம்பியார்
★ சிவகுமார்
★ சௌகார்ஜானகி ★ மனோரமா
★ பேபி பத்மினி ★ ராஜசுலோசனு

மற்றும்பலர் நடித்த



# திருமால் பெருமை


## ஈழநாடு 10- வது ஆண்டு நிறைவுவிழா

### 'ஈழநாடு' வெற்றிக் கிண்ணத்திற்கான
### உதைபந்தாட்ட நொக்-அவுட் போட்டி - யூன் 1969

#### கால் இறுதி ஆட்டம்

| | திகதி | நேரம் | கழகம் | போட்டி நடைபெறும் மைதானம் |
|---|---|---|---|---|
| 1. | 8-6-69 | பி. ப. 3-45 | யுத்தகவுன்சில் vs. பொலிஸ் | யாழ். விளையாட்டரங்கு |
| 2. | ,, | பி. ப. 5-00 | சென். அன்ரனீஸ் vs. கிருஸ்கொப்பர்ஸ் | ,, |
| 3. | ,, | பி. ப. 3-45 | மயிலிட்டி புளூஸ் vs. சென். மேரிஸ் | கோட்டை |
| 4. | ,, | பி. ப. 5-00 | வல்வை யுனேட்டட் vs. பாடும் மீன் | ,, |

### பிரவேசம் இலவசம்.

ந. பாலசுப்பிரமணியம்
செயலாளர்,
யாழ். உதைபந்தாட்டச் சங்கம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ப் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஜூன் மாதம் 7ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org